322

# வரலாற்று வீரர்கள்

322/H.65

ஆரும் வகுப்பு

1965

TB
031,6/60
M65
174706.

...ந்தர் & கம்பெனி, சென்னை-5

# வரலாற்று வீரர்கள்

துணைப்பாட நூல்

(ஆறும் வகுப்பு)

ஆசிரியர் :
வித்துவான் H. வைத்தியநாதன்
தேசீயப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, சென்னை-5

பிரசுரகர்த்தர் :
ராஜா ராம்சந்தர் & கம்பெனி,
520, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5.

முதற் பதிப்பு—1965

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
174706
சென்னை-600 008.

உரிமை பிரசுரகர்த்தர்களுடையது

அரசாங்கத்தாரால் 7-7-1965இல்
வெளியிடப்பட்டுள்ள புதிய பாடத்திட்டப்படி
தயாரிக்கப்பெற்றது.

73
031,6 60
N65

Paper used: 10·9 kg D. C. White Printing.

விலை 70 பை.

Printed at Raja Ramchander Press,
No. 4, Nallathambi Mudali Street, Madras-5.

# முன்னுரை

கல்வி பயிலத் தொடங்கும் சிறுவர்கள் அறிவு வளரப் பெறுவதொடு அச்சமற்ற நெஞ்சத்தொடு தீயசக்திகளை எதிர்த்துப் போராடும் வலிமையும், நாட்டுப்பற்றும் வாய்க்கப் பெற வேண்டும் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. எனவே, மேற்சொன்ன கருத்துக்கேற்ப உயர்ந்த குறிக்கோளொடு வாழ்ந்து நாட்டுக்குப் பணியாற்றிய ஐந்து சான்ருேர்களின் வரலாற்று நிகழ்ச்சிகள் இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளன. இவற்றைப் படிப்பதனுல் மாணவர் கல்வி யறிவும், நாட்டுப் பற்றும், வீரமும் எய்தி இந்தியத் தாயின் சிறந்த வருங்காலக் காப் பாளராயமைவர் என்பது எமது துணிபு. ஆசிரியப் பெருந்தகையோர் இந்த நூலை ஆதரிப்பார்களென நம்புகிருேம்.

ஆசிரியர்.

## பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தியாக வீரர் | ... | 5 |
| 2. | ஞான வீரர் | ... | 15 |
| 3. | அஞ்சா வீரர் | ... | 27 |
| 4. | வீர நங்கை | ... | 41 |
| 5. | கருணை வீரர் | ... | 57 |
| | முடிவுரை | ... | 70 |

# 1. தியாக வீரர்

இன்றைக்கு இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு கிரீஸ் நாடு நம் நாட்டைப் போலவே பண்பாட்டில் சிறந்து விளங்கிற்று. அந்நாட்டின் பண்பாட்டிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியது ஏதன்ஸ் என்னும் நகரம். அந்நகரம் ஜன நாயகத்துக்கே தாயகம் என்று கூறப்படும். அந்நகரத்தை ஆண்டது அந்நகரத்து மக்களே. அவர்களுக்கு அரசன் இல்லை; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவனே உண்டு. அவர்களுடைய நகரமே இராச்சியமாக இருந்தமையால் அதற்கு நகர இராச்சியம் என்று பெயர். அந்நகரத்தின் அரசியல் நிருவாகம் முழுவதும் அந்நகர மக்களால் நடத்தப்பட்டு வந்தது. சிறு ஓடுகளில் தங்கள் பெயரை எழுதித் தங்கள் கருத்தைத் தெரிவித்துக் கொள்வதுதான் அவர்களுடைய தேர்தல் முறை.

அந்நாட்டில் அக்காலத்தில் அரசியல் கலையிற் சிறந்தவர்களும், பேரிலக்கியங்கள்

கண்ட அறிஞர்களும், தத்துவ ஞானிகளும், ஒழுக்கநெறி தவருத சான்ருேரும் இருந் தனர். ஒருமுறை அரிஸ்ட்டைடிஸ் என்னும் அரசியல் தலைவரொருவரை நாட்டை விட் டகற்றப் பொது மக்களுடைய வாக்கெடுப்பு நடைபெற வேண்டியிருந்தது. எழுத்துத் தெரியாத ஒருவன் அரிஸ்ட்டைடிஸை முன்பு நேரிற் கண்டதில்லை. அவன் அரிஸ்ட் டைடிஸிடம் தனது வாக்குச் சீட்டைக் கொணர்ந்து தந்து அரிஸ்ட்டைடிஸின் பெயரை அதில் எழுதித் தரும்படி கேட்டான். "நீ ஏன் அரிஸ்ட்டைடிஸை இவ்வூரை விட்டு அகற்ற விரும்புகிருய்?" என்று அரிஸ்ட் டைடிஸ் வினவினர். எழுத்தறிவுமில்லாத அந்தக் குடிமகன் "இந்த அரிஸ்ட்டைடிஸை இவ்வூரில் உள்ளவர்கள் நெறி தவருத சான் ருேன் என்று சொல்லிக்கொண்டே இருக் கிருர்கள். அதைக் கேட்கக் கேட்க எனக்குப் பொருமை மூள்கிறது. ஆகையால் அவர் இந்த ஊரை விட்டு அகன்ருல்தான் நான் மன அமைதியோடு இருக்க முடியும்" என் ருன். தம்மையே தூற்றுவதாகிய இத்தீய உரையைக் கேட்ட அரிஸ்ட்டைடிஸ் கொஞ்ச மும் மனத்தில் சுளித்தலின்றி அவன் சொன்ன வாறே எழுதிக் கொடுத்தார். அவர் வேருெரு

பெயரை எழுதிக் கொடுத்து அவ்வறிவிலியை ஏமாற்றியிருக்கக்கூடும். ஆயினும் அவர் அவ்வாறு செய்யவில்லை. அவரை அவ்வூர் மக்கள் 'நெறிதவருத அரிஸ்ட்டைடிஸ்' என்று அழைத்தமை பொருத்தமானதே என்பதனை இந்தச் செயலிலிருந்தே நாம் அறியலாம்.

ஒரு முறை கிரீஸ் நாட்டின் மீது பாரசீகர்கள் படையெடுத்தனர். கிரேக்கர் படைகளினும் பாரசீகர் படை எண்ணிக்கையில் மிகப் பலவாயிருந்தமையால் கிரீஸ் நாட்டு மக்களெல்லோருமே சேர்ந்து அப்படையை எதிர்க்கவேண்டியிருந்தது. அதிலும், ஏதன்ஸ் நகரத்தில் இருந்தவர்கள் பகைப் படைகளின் தாக்குதலை முன்னணியில் நின்று எதிர்க்க வேண்டியிருந்தது. ஏதென்ஸ் நகரத்தவர்களைக் காட்டிலும், கிரீஸ் நாட்டின் தென் பகுதியிலுள்ள ஸ்பார்ட்டா நகரமக்கள் போர் புரிவதிற் சிறந்தவர்கள். எனவே, தம் தாய் நாட்டிற்கு ஏற்பட்ட இந்தத் தீங்கைத் தவிர்ப்பதற்காக லியானிடாஸ் என்னும் ஸ்பார்ட்டா மன்னர் அவர்களுக்கு உதவியாகத் தன் நாட்டுப் படையுடன் போர்க்களம் வந்து சேர்ந்தார். அவர் ஏறத்தாழ நாலாயிரம் வீரர்களின் உதவியைக்கொண்டு மூன்று இலட்சம்

வீரர்கள் கொண்ட பெரும் படையை எதிர்க்க வேண்டிய நிலையில் இருந்தார்.

ஏதன்ஸ் நகரத்திற்கு வடபால் மலைப் பாங்கான இடத்தில் இரு மலைச்சரிவுகள் சேரு மிடத்தில் ஒரு கணவாய் உண்டு. அதற்குத் தர்மாபைலே கணவாய் என்பது பெயர். லியானிடாஸ் அந்தக் கணவாயில் தன் படைகளை நிறுத்திப் பகைவர்களை எதிர்ப்பது என்று தீர்மானித்தார். ஒன்றுக்குப் பத்துமடங்கு மிகுந்த படைபலம் கொண்ட பகைவனை எதிர்க்கத் துணிந்த கிரேக்கர்களின் வீரம்தான் என்னே !

"பாரசீகப்படை வீரர்களின் ஈட்டிகளும் கேடயங்களும் பகலவனையே மறைக்கும் அளவினவாய் மிகுந்துள்ளன" என்று சிலர் கூறினர். இதைக் கேட்ட ஒரு கிரேக்கப் படை வீரன் அலட்சியமாக "மிகவும் நல்லதாயிற்று. நாம் நிழலில் நின்று போர் புரியலாம்" என்றான். இதனினும் அவர்களது அஞ்சாமைக்கும் நெஞ்சுறுதிக்கும் வேறு சான்று வேண்டுமோ !

இத்துணைத் துணிவுமிக்க வீரர்களில் நாலாயிரவர் அக்கணவாயில் நின்று பகை

வரை எதிர்த்துப் போர் புரிந்தனர். பகைவரின் படை வீரர்கள் மிகப் பலராயிருந்தமையால் லியானிடாஸின் படை வீரரால் எதிர் நிற்க இயலவில்லை. அவரது நெஞ்சுத் துணிவும், ஊக்கமும், அஞ்சாமையும் விழலுக்கிறைத்த நீராயின. எனினும் உடம்பிலிருந்து உயிர் பிரியும் வரை தாய் நாட்டைக் காக்கும் பணியில் ஊன்றி நின்றனர். படைத்தலைவனாக வந்த மன்னர் லியானிடாஸொடு அனைவரும் போர்க்களத்தே பட்டனர். உரிமைப் போரில் உயிரையே பணயம் வைத்து வீர சுவர்க்கம் எய்தினர். என்னே அவர் வீரம்!

இத்தகைய உரிமை வீரர்கள் உதித்துப் பெரும்புகழ் எய்திய அந்த நாட்டில் ஒரு சிறந்த ஞானி ஒருவர் இருந்தார். அவர் ஏதன்ஸ் நகரத்தைச் சேர்ந்தவர். அவர் பெயர் சாக்ரடீஸ் என்பது. அவர் மனைவியின் பெயர் சாந்தபே என்பதாம். சாக்ரடீஸ் பார்ப்பதற்கு அழகிய தோற்றமுடையவரல்லர். அவர் மனைவி சாந்தபே, சாந்தம் சிறிதும் இல்லாதவள்; 'அவள் பெண் அல்லள்; பேயே' என்று கண்டோர் கருதுமாறு நடந்து வந்தாள். எனினும் சாக்ரடீஸ் அவளைப் புறக்கணிக்காமல் அன்பு வைத்துப் போற்றி இல்லறம் நடத்தி வந்தார்.

சாக்ரடீஸ் நாள்தோறும் ஏதன்ஸ் நகரத் தெருக்களைச் சுற்றி வருவதைப் பொழுது போக்காகக்கொண்டிருந்தார். அவருக்குப் பல நண்பர்கள் இருந்தனர். அவர்கள் அவருடைய சீடர்களாகவும் இருந்தனர். சாக்ரடீஸ் தன் நண்பர்களிடம் எப்பொழுதும் கேள்விகள் பல கேட்டுக்கொண்டே இருப்பார். அவற்றிற்கு ஏற்ற விடைகளையும் எடுத்துரைப்பார். இவ்வாறு உரைவாயிலாகவே அறிவு புகட்டுவதிலும் உண்மையை உணர்த்துவதிலும் சாக்ரடீஸினை வெல்பவர் இல்லை. பிளேட்டோ, செனபன் முதலிய புகழ்பெற்ற கிரேக்க அறிஞர்கள் அவருடைய நெருங்கிய நண்பர்களாயும், மாணவர்களாயும் இருந்தனர். அன்னார் அடைந்த புகழுக்கெல்லாம் சாக்ரடீஸே காரணமாவர் என்றாலும் தவறில்லை.

சாக்ரடீஸ் நாள் முழுவதும் வேலையற்றவரைப்போல் நகரத்தின் தெருக்களைச் சுற்றி வந்து கொண்டும் நண்பர்களோடு உரையாடிக் கொண்டுமிருந்தால் குடித்தனம் எவ்வாறு நடைபெறும் என்பது சாந்தபேயின் தீராக் கவலையாயிருந்தது. ஆதலால் அவள் சாக்ரடீஸைப் பல வகையிலும் வருத்தி

வந்தாள். அவளுடைய தொடர்பால் சாக்ரடீஸ் பொறுமையிற் சிறந்த ஞானியாக மாறினூர்.

ஒரு முறை சாக்ரடீஸ் மனைக்குச் சில நண்பர்கள் வந்திருந்தனர். தெருத் திண்ணையில் இருந்துகொண்டு அவர்களோடு சாக்ரடீஸ் உரையாடிக்கொண்டிருந்தார். இது கண்டு பொருத சாந்தபே மேல்மாடியில் நின்று கொண்டு சாக்ரடீஸையும் அவர் நண்பர்களையும் பலவாருக வைதுகொண்டிருந்தாள்.

"இது என்ன பெருங்கூச்சல்? எங்கிருந்து கேட்கிறது?" என்று நண்பர்கள் வினவினர்.

"இது எங்கள் வீட்டில் இடிக்கும் இடி; இனி மழையும் பெய்யும்" என்று விடையளித்தார் சாக்ரடீஸ்.

தான் கூச்சலிட்டும் நண்பர்கள் பிரிந்து போகாமலிருப்பதைக் கண்டு சினமுற்ற சாந்தபே ஒரு குடத்தில் நீரை மொண்டுவந்து மாடியிலிருந்து, கீழிருந்தவர்கள் தலையில் நீர் விழும்படி கவிழ்த்தாள். எல்லோரும் மூச்சுத் திணறித் தவித்தனர்.

"நான் முன்பே சொன்னேன் அன்றோ மழையும் பெய்யுமென்று? இதுதான் அந்த

மழை" என்று அமைதியாகக் கூறினர் சாக்ரடீஸ். இதனினும் சிறந்த பொறுமையை எவரேனும் மேற்கொள்ள இயலுமோ?

சாக்ரடீஸ் மனிதர் உள்ளத்தில் புதுமையைப் புகட்ட விரும்புபவர்; பழமை என்னும் ஒரு காரணத்தாலேயே பழையனவெல்லாம் தூய்மையானவை என்று கருதும் மனப்பான்மையை அறவே கண்டிப்பவர். அரசனுக்குக் குடிமக்கள் பணிவதும், பெற்ரோர்க்கு மக்கள் பணிவதும் அவரவர் மனச்சாட்சியையும் அறிவையும் பொருத்தே இருத்தல் வேண்டும் என்பது அவர் கோட்பாடு. அவ்வூர் மக்கள் நம்பி வந்த பழைய சாத்திரங்களையும் சமய சாத்திரங்களையும் சமய சம்பந்தமான கொள்கைகளையும் மக்கள் தமது அறிவைக் கொண்டு ஆராய்ந்து தெளிந்தபின்பே மேற்கொள்ளவேண்டும் என்ருர் அவர். இதனல் அவரைச் சேர்ந்தவர்களுடைய பழக்கவழக்கங்களும் மனப்பான்மையும் புதுமுறையில் மாறின. பழமையில் திளைத்த ஏதன்ஸ் நகர மாந்தர் பலர் சாக்ரடீஸ் நாட்டின் பண்பாட்டைக் கெடுக்க முற்பட்டுள்ளார் என்று கருதினர். எந்த நாட்டிலும் எக்காலத்திலும் புதுமையை ஏற்பவர்களினும் பழமையைப்

போற்றுபவர்களே மிகுதியாக இருப்பர் என்பது இயல்பு. ஆகவே, சாக்ரடீஸை எவ்வாறேனும் நாட்டை விட்டேனும் ஒட்டிவிட வேண்டும்; இல்லையெனில் ஏதன்ஸின் பழம் பெருமை அழிந்துவிடும் என்று எண்ணினர். உடனே, பெரும்பான்மையோர் கையெழுத்திட்ட விண்ணப்பம் ஒன்று அரசாங்கத்தாரிடம் தரப்பட்டது. அதில் நாட்டின் பழைய பண்பாட்டிற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுவதுடன் சிறுவர்களின் மனத்தையும் கெடுப்பதாக சாக்ரடீஸ் மீது குற்றம் சாட்டப்பட்டது. இக்குற்றத்திற்கு மரண தண்டனையே விதிக்கத் தக்கது என்றும் கூறப்பட்டது.

இது கேட்ட சாக்ரடீஸின் நண்பர்கள் அவரை அவ்வூரைவிட்டு ஓடிவிடும்படி வேண்டிக்கொண்டனர். அவர்கள் சொற்படி சாக்ரடீஸ் ஓடியிருப்பாராயின் உயிர்தப்பியிருக்கவும் கூடும். ஆனால் அவ்வாறு செய்ய அவர் விரும்பவில்லை. தான் ஒரு குற்றமும் செய்யவில்லை என்று அறிந்திருந்தும், பொய்க் குற்றச்சாட்டிற்கு அஞ்சி ஓடி ஒளிய அவர் மனம் இடம் தரவில்லை. தண்டனையைக் குறைக்கும்படி வேண்டிக்கொண்டிருந்தால் அவர் விருப்பப்படி அரசாங்கத்தார் தண்

டனையைக் குறைத்தும் இருக்கக்கூடும். ஆனால் அவ்வாறு கேட்கவும் அவர் இசையவில்லை.

சாக்ரடீஸை ஏதன்ஸ் நகரமே குற்றவாளி எனக் கருதிற்று. அவர் மீது கொணரப்பட்ட குற்றச்சாட்டை விசாரிக்க நகர மக்கள் அனைவரும் கூடினர். சாக்ரடீஸ் தான் செய்தது எவ்விதத்திலும் தவறில்லை என்று வாதாடினார். ஆனால் எவருமே அவர் கூறியதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட சாக்ரடீஸ் நஞ்சை உண்டு சாகவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இதற்குச் சிறிதும் அஞ்சாது சாக்ரடீஸ் அவ்வாறே நஞ்சுண்டு இறந்தார். ஆயினும் புகழ் அவரோடு இறக்கவில்லை. உலக அறிவாளிகளிலெல்லாம் தலைசிறந்தவர் என்னும் தனிப்பெரும் புகழ் சாக்ரடீஸிற்கு நிலைத்திருக்கிறது; என்றும் அழியாமல் நிற்கவும் வல்லது.

### வினாக்கள்

1. சாந்தபே எத்தகைய குணமுடையவள்? அதனை ஒரு நிகழ்ச்சி கூறி விளக்குக.
2. சாக்ரடீஸ் மீது ஏன் குற்றம் சாட்டப்பட்டது?
3. சாக்ரடீஸ் எதனால் உலகப் புகழ் பெற்றார்?

## 2. ஞான வீரர்

கிரீஸ் நாட்டின் ஒரு பகுதியான மாசிடோனியாவில் இன்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பு பிலிப் என்னும் பெயருடைய மன்னர் ஒருவர் ஆண்டுவந்தார். அவர் தாம் முதன்முதலில் கிரீஸ் நாட்டின் பெரும்பகுதியை வென்று ஐக்கியப்படுத்தியவர். அவருக்கு அலெக்ஸாந்தர் என்ற மகன் ஒருவன் இருந்தான். அவன் சிறுவயதிலிருந்தே துணிவும், மன உரமும், வீரமும் படைத்தவனாயிருந்தான். அவ்வயதிலேயே கெரோனியா என்னும் இடத்தில் நடந்த போரில் படைத்தலைமை பூண்டு படைகளை நடாத்தி வெற்றியும் கண்டான் எனில் அவனது திறமைக்கு வேறு சான்றும் கூற வேண்டுமோ? கெரோனியா போர்க்களத்தினின்றும் பிலிப்பும் அலெக்ஸாந்தரும் மாசிடோனியாவிற்குத் திரும்பி வந்ததும், தமது வெற்றியைக் கொண்டாடுவதற்காகப் பெரியதொரு விழாக் கொண்டாடினர்.

ஒரு சமயம் பிலிப் வேருெரு மாசிடோனியப் பெண்ணை மணக்க விரும்பி அந்த மணத்திற்கு ஏற்பாடுகளும் செய்யத் தொடங்கினர். அலெக்ஸாந்தரின் தாய் இதைக் கண்டு வெறுப்பும் சினமும் கொண்டாள். ஆயினும் மன்னர் எண்ணியதை மாற்ற யாரால் இயலும்? மணத்திற்கு ஏற்பாடுகள் ஆயின. மன்னர் திருமணத்தைச் சிறப்புற நடத்த விருந்துகளும் ஆடல் பாடல்களும் நிகழ்ந்தன. பிலிப், அலெக்ஸாந்தர் மற்றுமுள்ளோர் பலரும் விருந்துக்கூட்டத்தில் தத்தமக்கென ஏற்பட்ட இடங்களில் அமர்ந்து விருந்தை யுண்டு சிரித்து அளவளாவிக் களித்திருந்தனர்.

மன்னருடைய புதிய மனைவியின் மாமனை அட்டாலஸ் என்பவன் அவ்வமயம் "மணமகளும் மணமகனும் நீடூழி வாழ்ந்து மாசிடோனிய இராச்சியத்திற்கு ஏற்ற இளவரசன் ஒருவனைப் பெற்றெடுக்க அருளுமாறு இறைவனை வேண்டுவோமாக" என்று கூறினன். இதுகேட்ட அலெக்ஸாந்தர் மிக்க சினத்தால் முகம் சிவந்தவனுய், தான் சாராயம் குடித்துக்கொண்டிருந்த கோப்பையை அட்டாலஸின் முகத்தில் விட்டெறிந்தார். இது பிலிப்பிற்கு அளவுகடந்த ஆத்திரத்தை

உண்டுபண்ணவே அலெக்ஸாந்தரை ஈட்டியால் குத்திக் கொல்ல எண்ணித் தமது இருக்கையை விட்டு எழுந்தார். எழுந்தவர் குடிமயக்கத்தால் கீழே விழுந்தார். "இருக்கை விட்டு எழுந்து நடக்கமாட்டாத மன்னரோ நாடுவிட்டு நாடு சென்று வெற்றி காண்பவர் !" என்று ஏளனமாகப் பேசிக் கைகொட்டி ஆர்ப்பரித்தார் அலெக்ஸாந்தர். இனித் தன் தந்தையோடு வாழ்தல் இயலாது என்று உணர்ந்த அலெக்ஸாந்தர் அன்றே தம் தாயை அழைத்துக்கொண்டு வேறு ஊருக்குப் போய் விட்டார். பிலிப் இறந்த பிறகுதான் அவர் திரும்பித் தம் ஊருக்கு வந்து மன்னர் பதவி ஏற்றார்.

முதலில், அலெக்ஸாந்தர் மாசிடோனியாவிற்கு மன்னர் என்ற தம் நிலையை உறுதிப்படுத்திக்கொண்டார். பிறகு கிரீஸ் நாடு முழுவதையும் படிப்படியாக வென்று தம் அதிகாரத்தையும் புகழையும் நிலைநாட்டினார். உலகப் பேரறிவாளர்களிற் சிறந்த அரிஸ்டாட்டல் என்பவர் அவருக்கு ஆசிரியராயிருந்து பெருந்துணை புரிந்தார்.

கிரீஸ் நாட்டின் தென்பகுதியிலுள்ள காரிந்த் என்னும் நகரத்திற்கு அலெக்ஸாந்தர்

ஒருமுறை சென்றிருந்தார். பல்வகைப் படையும் புடைசூழச் சென்றிருந்த மன்னர் அவ்வூரிலிருந்த ஒரு மாளிகையில் தங்கியிருந்தார்.

அதே ஊரில் முக்கியமான தெரு ஒன்றில் சிறிது ஒதுக்குப்புறமான ஓரிடத்தில் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவர் இருந்த இடத்தில் சிறிதும் நிழல் இன்றி மிகுந்த வெயிலாயிருந்த போதிலும் அவர் அதைப் பொருட்படுத்தாமலிருந்தார். அந்த மனிதரைப் பார்த்தவர்களெல்லோரும் 'நிழல் படர்ந்த இடம் எத்தனையோ இருக்க ஏன் இப்படி வெயிலிலிருந்து உடம்பை வருத்துகிறார்' என்று தத்தமக்குள் சொல்லிக்கொள்பவராய் வியந்து சென்றுகொண்டிருந்தனர். அவரது நீண்ட தாடியும், உட்குழிந்த கண்ணும், புழுதிபடிந்திருந்த மேனியும், அவர் இடுப்பிலிருந்த அழுக்கு மிகுந்த துணியும் அவர் தோற்றத்தைக் கண்டோர் மறக்க இயலாதவாறு செய்தன. அவரைச் சுற்றிலும் சிலர் நின்றுகொண்டிருந்தனர். அவர்களில் சிலர் அவர் ஒவ்வோரமயங்களில் கூறும் சொற்களைக் கேட்டுக்கொண்டும், சில ஐயங்களை அவரிடம் கேட்டுக்கொண்டும் இருந்தனர். வேறு சில வழிப்போக்கர்கள் அவரைப் பார்த்து

நகையாடிக்கொண்டு சென்றனர். ஆயினும் அடிசுடும் வெயிலில் வீற்றிருந்த அம்முதிய வர் எதையும் பொருட்படுத்தவில்லை.

அப்பொழுது அங்கு ஒரு பரபரப்பு ஏற் பட்டது. "வழிவிடுங்கள்! வழிவிடுங்கள்" என்ற ஒலி அதிகாரத்தோடு ஒலித்தது. முதிய வரைச் சூழ்ந்திருந்த கூட்டம் விரைவில் தானாகவே விலகிற்று. படைக்கலக்கைய ராய்ப் பல போர்வீரர்கள் புடைசூழ ஒரு வீரன் அம்முதியவரை நோக்கி வந்தான். அந்தக் கிழவர் இவ்வளவு ஆரவாரத்தையும் ஒரு சிறிதும் பொருட்படுத்தவில்லை. வந்த வீரன் அவரை வணங்கி நின்றான். முதியவர் வீரனை நிமிர்ந்து நோக்கி ஒரு புன்முறுவல் பூத்து மறுபடியும் தலையைக் குனிந்துகொண்டு முன்பு போல ஆழ்ந்த எண்ணத்தில் முழு கினார்.

வீரன், "ஐயா!" என்று மெதுவாக விளித் தான். பெரியவரிடமிருந்து ஒரு விடையும் இல்லை.

"ஐயா! பெரியவரே! என்னை நோக் குங்கள்; நான் யார் தெரிகிறதா?" என்று அதிகாரம் கலந்த குரலில் வினவினான் வீரன்.

பொறுமை இழந்தவர் போலக் காணப் பட்ட அப்பெரியவர் "ஏன் அப்பா! என்னை ஏன் வருத்துகிறாய்? உனக்கு வேறுவிதமான அலுவல் இல்லையா?" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டு கேட்டார்.

"ஐயா! நான் யார் என்று தங்களுக்குத் தெரியவில்லைபோலிருக்கிறது; நான்தான் உல கத்தை வென்ற மகாவீரன்......"

"உலகத்தை வென்றவனா? எந்த உல கத்தையப்பா நீ வென்றாய்? அப்படியேயிருந் தாலும்தான் எனக்கென்ன? உன்னைத் தெரிந்துகொள்ள வேண்டிய தேவை எனக்கு ஒன்றும் இல்லையே........"

"அது கிடக்கட்டும்; தங்களுக்கு என் னால் ஆகக்கூடிய உதவி ஏதேனும் இருக்கு மானால் அதை நான் செய்யக் காத்துக்கொண் டிருக்கிறேன்; ஆணையிட வேண்டுகிறேன்" என்றான் வீரன். அவனுடைய பணிவு வியக் கத்தக்கதாயிருந்தது.

முதியவரது புன்சிரிப்பு பெருஞ் சிரிப்பாக மாறிற்று; குலுங்கக் குலுங்கச் சிறிது நேரம் சிரித்தார். பிறகு,

"நீயோ எனக்கு உதவி செய்பவன்! நல்ல செய்திதான். போ! நீ வந்த வழியைப்

பார்த்துக்கொண்டு போனுல் அதுவே பெரிய உதவி" என்ருர்.

"ஐயா! என்னுல் செய்ய முடியாத உதவியே இல்லை. என்னை மகா அலெக்ஸாந்தர் என்று உலகம் புகழ்கிறது. தங்களுக்கு ஏதாவது ஒரு உதவி செய்யும் பெருமையை அடைய விரும்பி வந்தேன். என் ஆர்வத்தை மதித்து உத்தரவிடுங்கள்" என்ருன் அவ் வீரன்.

தன் எதிரில் பணிவோடும் துணிவோடும் நிற்பவன் உலகத்தை வென்ற மகா அலெக்ஸாந்தர் என்று அறிந்தும் அந்தப் பெரியவர் முகத்தோற்றத்தில் ஒரு சிறு மாறுதலும் உண்டாகவில்லை.

"ஓகோ! நீதானு அப்பா, அந்தப் பெரிய மனிதன்! அப்படியானுல், நீ எனக்கு ஒரு பெரிய உதவி செய்யவேண்டும்" என்ருர் அவர்.

"என்ன சொல்லுங்கள்; செய்யக் காத்திருக்கிறேன்" என்ருர் அலெக்ஸாந்தர்.

"இந்த வெயிலோ கனன்று காய்கிறது; நீயோ நன்கு வளர்ந்த உடலும் உயரமும்

பெற்றிருக்கிருய்; ஆகையால் இப்படி இந்தப் புறமாக என்னருகில் வெயிலே மறைத்துக் கொண்டு சிறிது நேரம் நிற்பாயாளுல் என்மீது வெயிலாவது படாமல் இருக்கும்; இந்த உதவியைச் செய்; போதும்" என்ருர்.

மகா வீரரான அலெக்ஸாந்தர் இவ் விடையை எதிர்பார்க்கவில்லேயாயினும், அம் முதியவர் கூறியபடியே செய்தார்.

அம்முதியரே தயசீனஸ் என்னும் புகழ் பெற்ற பெரிய கிரேக்க ஞானி.

"நான் ஏதோ விணப்பயனுல் அலெக் ஸாந்தராகப் பிறந்துவிட்டேன்; இல்லாவிட் டால் தயசீனஸாகப் பிறக்கவே நான் ஆசைப் படுவேன்" என்ருர் அந்த வீரர்.

தயசீனஸ் ஒரு வியக்கத்தக்க மனிதர்; உலக ஆசைகளேத் துறந்தவர்; எளிய வாழ்க்கையை முற்றிலும் கடைப்பிடித்தவர்; வீண் பெருமை கொண்டாடுபவர்களே மன மார வெறுப்பவர். உலகியலில் ஈடுபட்டு வாழ் நாளே வீணே கழிக்கும் மக்களேக் காணின் அவருக்குச் சினமும், சிரிப்பும், இரக்கமும் உண்டாகும்.

அவர் வெயில் காயினும், மழை பெய்யினும் குடை பிடித்துக் கொள்வதில்லை. ஒரு கிழிந்த கோணிப்பைதான் அவருடைய உடை. அவருக்கென்று குடியிருக்க ஒரு வீடு இல்லை. அவர் எங்கு வேண்டுமானாலும் இருப்பார். ஆனால் தனக்கென்று ஒரு வீடு வேண்டும் என்று உலகில் அனேகர் விரும்பியலைவதை அவர் அறிந்தவர்தான். ஆகவே தனக்கும் ஒரு வீடு அவர் வாங்கி வைத்திருந்தார். அவருடைய வீடு மாடங்களும் கூடங்களும் கொண்ட மாளிகையன்று; எளியவர் வாழும் குடிலும் அன்று. அது ஆறு அடி நீளமும் மூன்று அடி அகலமும் உள்ள ஒரு மரத் தொட்டி. அந்தத் தொட்டியில் அவர் வீற்றிருப்பார். சில சமயங்களில் படுத்தும் இருப்பார்.

"தயசீனஸ்! ஏன் இப்படி இந்தத் தொட்டியில் வீற்றிருக்கிறீர் ?" என்று யாரேனும் கேட்பின் "நான் என் வீட்டில் இருக்கிறேன் ; உமக்கென்ன ?" என்று விடையளிப்பார்.

இவர் ஒரு முறை ஏஜினா என்னும் பட்டினத்திற்குக் கப்பலில் போய்க்கொண்டிருந்த போது கடற்கொள்ளைக்காரர்களால் பிடித்துச் செல்லப்பட்டார். அவர்கள் தயசீனஸ் தங்க

ளுக்கு ஒரு வேலைக்கும் உதவாதவர் என்பதைத் தெரிந்து கொண்டு இவரை ஒரு அடிமையாக விற்றுவிட்டார்கள். இவரை விலைக்கு வாங்கியவர்களுக்கும் இவரை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று புரியவில்லை. அவர்கள் இப்படி வருந்துவதைக் கண்ட தயசீனஸ் "எனக்கு உங்களைப் போலெல்லாம் ஒரு வேலையும் செய்யத் தெரியாது. மனிதர்களை அடக்கி ஆளுகிற ஒரு வேலையில்தான் நான் திறமைசாலி. ஆகவே தமக்கு எசமானன் ஒருவன் வேண்டும் என்று யார் விரும்புகிறார்களோ அவர்களுக்கு என்னை விற்றுவிடுங்கள்" என்று அவர்களுக்கு அறிவு புகட்டினார். அவர்களும் இவர் விரும்பியவாறே செய்தனர். காரிந்த் நகரத்தில் ஒரு பெருஞ் செல்வர் தன் மக்களுக்கு ஒரு ஆசிரியர் தேவை யென்று தேடிக்கொண்டிருந்தார். அவரிடம் இவரைக் கொண்டு போய் விட்டனர்.

அக்காலத்தில் அதீனிய நகரம் விளையாட்டுக்களிலும், இன்னிசை நாடகம் முதலிய பொழுதுபோக்குக்களிலும் காலம் கழித்து வந்தது. இது தயசீனஸ் மனத்துக்குப் பிடிக்கவில்லை. ஆள்பவர், குடிமக்கள் எல்

லோருமே இப்படி இருப்பதைக்கண்டு அந்த ஊரில் அறிவுத்துறையில் ஈடுபடுபவர்களே இல்லையோ என்கிற ஐயம் அவருக்கு ஏற்பட்டது. தத்துவ ஆராய்ச்சியை விட்டுவிட்டுப் பயனற்ற விளையாட்டுக்களில் பொழுது போக்குகிறவர்கள் அறிவாளிகள் அல்லர் என்று அவர் கருதினர். அதை அந்நகர மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும் என்றும் அவர் விரும்பினர்.

அவர் பட்டப்பகலில் ஒரு விளக்கை ஏற்றி எடுத்துக்கொண்டு அதீனிய நகரத்தின் தெருக்களின் வழியே சென்றார். வழியே வருபவர் ஒவ்வொருவர் முகத்திற்கெதிரேயும் அந்த விளக்கைத் தூக்கிப் பிடித்துப் பார்த்தார்.

"ஏன், ஐயா! என் முகத்தைப் பார்க்கிறீர்? உமக்கென்ன பைத்தியமா அல்லது கண் தெரியவில்லையா?" என்று சிலர் கேட்டனர்.

"எனக்குப் பைத்தியம் இல்லை; இந்த ஊரில் அறிவாளி என்னும்படி ஒருவரேனும் இருக்கிறாரா என்று தெரிந்து கொள்வதற்காகத் தேடுகிறேன்" என்று விடையளித்தார்.

இத்தகைய ஞானவீரரும் உலகைவென்ற போர் வீரரும் ஒருவரையொருவர் கண்டு அளவளாவிய காட்சி வரலாற்றில் பொறிக்கப்பட்டுள்ளது.

அலெக்ஸாந்தர் தனது வாழ்க்கையில் அரிஸ்டாட்டல், தயசீனஸ் போன்ற பல அறிவாளிகளுடைய தொடர்பால் பேரறிவாளர் ஆனுர். போர்க்களங்களில் அவர் கண்ட வெற்றிகளை மட்டுமே பலர் அறிவராயினும் அறிவுத் துறையில் அவர் கண்ட வெற்றிகளும் பலவேயாம்.

### வினுக்கள்

1. அலெக்ஸாந்தர் நெஞ்சுரத்தை விளக்கும் ஒரு செயலை விவரித்து எழுதுக.
2. தயசீனஸ் எத்தகைய வீட்டில் குடியிருந்தார் ?
3. அலெக்ஸாந்தரும் தயசீனஸும் உரையாடியதை எழுதுக.
4. ஏதன்ஸ் நகரில் தயசீனஸ் பகலில் விளக்கேற்றிச் செல்லக் காரணம் யாது ?
5, அரிஸ்டாடல், பிலிப், அட்டாலஸ்: ஒவ்வொருவரைப் பற்றியும் பத்து வரிகள் எழுதுக.

# 3. அஞ்சா வீரர்

சுவிட்சர்லந்து என்பது ஐரோப்பாக் கண்டத்தில் ஆல்ப்ஸ் மலைப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள அழகிய சிறிய தேசமாகும். ஒரு சமயம் அது வீறிழந்து அண்டை நாடான ஆஸ்திரிய நாட்டுக்கு அடிமைப்பட்டிருந்தது. ஆஸ்திரிய நாட்டினை அப்போது ஆண்டுக் கொண்டிருந்த அரசன் மிகவும் கொடியவனுயிருந்தான். எனவே, தன்னைப்போல் கொடுங் குணம் வாய்ந்தவர்களையே தனது அடிமையான நாடுகளுக்கும் தலைவனுக நியமித்தான். அந்த முறையில் சுவிட்சர்லந்துக்கும் ஒரு தீயவனை ஆட்சியாளனுக அனுப்பிவைத்திருந்தான். அந்த ஆட்சியாளன் பெயர் கெஸ்லர் என்பதாம்.

கெஸ்லர் என்ருல் அழுகின்ற பிள்ளையும் வாயை மூடிக்கொண்டு விடும் என்ருல் அவனது கொடுந்தன்மையைப் பற்றிக் கூற வேறு சான்று வேண்டுவதில்லை. சுவிட்சர்லந்தை ஆளவந்த தெய்வமாகவே அவன் தன்னைக் கருதிக்கொண்டான். மக்கள் தன் பெயரைக் கேட்டவுடனே மண்டியிட்டு அடிபணிய

வேண்டும் என்ற ஆசை அவனுக்கு உண்டு. அவனது இறுமாப்புக்கு இது ஒரு எடுத்துக் காட்டாம்.

உரிமையாட்சியை உயிராக மதிக்கும் சுவிட்சர்லந்து மக்கள் தம் அடிமைத் தளையை அறுத்தெறியவும் ஆஸ்திரிய நாட்டுக் கொடுங் கோலனை அழிக்கவும் துடிதுடித்து நின்றனர்; ஆனால் அவர்களை ஒருமுகப்படுத்தித் தைரிய மாக நடத்திச் செல்லும் தலைவனைப் பெருமை யால் செய்வதறியாமல் வருந்திக்கொண்டிருந் தனர். 'யானைக்கு ஒரு காலம் வந்ததென்றால் பூனைக்கும் ஒரு காலம் வரத்தானே செய்யும்' என்ற பழமொழியை மனத்துட்கொண்டு தக்க தருணத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தனர்.

கெஸ்லரின் கொடுமைகளையெல்லாம் பொறுத்துக்கொண்டு அவன் கட்டளையை மதித்து நடப்பவர்போல் சுவிஸ் வீரர்களெல் லோரும் பாசாங்கு செய்துகொண்டிருந்தனர். கோழைகளாயிருந்த சிலர் அவன் சொற்படி செய்து அவனது கருணையை எதிர்நோக்கி இருந்தனர்.

இப்படி இருதிறப்பட்ட மக்களும் நாட் டில் இருப்பதாலேயே ஒருநாடு அடிமைப்படு

கிறது. அனைவரும் ஒன்றுபட்ட உள்ளத்தின ராய் இருந்து ஒரு நாட்டில் பணியாற்றுவரா யின் எந்த வல்லவன்தான் அந்த நாட்டினை அடிமையாக்க முடியும்? ஓரடி நிலத்தையும் அந்த நாட்டிலிருந்து பறிக்க எண்ணினாலும் நாட்டுப் பற்றுகிய கனல் அந்த எண்ணத்தை யும் சுட்டுப் பொசுக்கிவிடும். இதனைப் பல நாட்டுச் சரித்திர நிகழ்ச்சிகளால் நாம் உணர லாம்.

ஒருநாள், சுவிட்சர்லந்தின் தலைநகரத்துச் சந்தையிலிருந்து காட்டுவாசியொருவன் காட் டிலுள்ள தன் வீடு நோக்கிச் சென்றுகொண் டிருந்தான். அவன் சில மான் தோல்களை விற்கச் சந்தைக்குத் தன் மகனோடு வந்தான். கொண்டுவந்த தோல்களையெல்லாம் விற்ற பிறகு, கையில் கிடைத்திருக்கும் பணத்தை எண்ணிப் பார்த்துக்கொண்டே போய்க் கொண்டிருந்தான். அவன் மகன் எங்கேயோ கொஞ்சம் விலகிப் போயிருந்தான்.

திடீரென்று இரும்பு போன்ற ஒரு கை அந்தக் காட்டுவாசியின் கையை இறுகப் பற்றியது. வனவாசி திகைத்து ஏறிட்டுப் பார்த்தான். ஆஸ்திரியப் படைவீரனொருவன் சினத்தால் முகஞ் சிவக்கத் தன் எதிரே நின்று

உறுமி, இடது கையால் அவனைப் பற்றிக் கொண்டு வலது கையை நீட்டிப் பாதை யோரம் சுட்டிக் காட்டினன். அவன் காட்டிய இடத்தில் காட்டுவாசி விழியைத் திருப்பிப் பார்த்தான்.

அங்கு ஒரு மரத்தாலான தூண் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. அதன் தலைப்புறத்தில் ஒரு தொப்பி வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்துவிட்டு ஒன்றும் புரியாமல் விழித்தான் அந்தக் காட்டுவாசி.

உடனே, படைவீரன் "என்ன விழிக்கிருய்? வணங்கு அதனை!" என்று அதட்டிக் கூறினன். பின்னர் அவர்களுக்குள் பின்வரு மாறு உரையாடல் நிகழ்ந்தது :—

"எதனை வணங்கவேண்டும்?"

"அந்தத் தொப்பியை."

"தொப்பியை யாரேனும் வணங்குவார்களா?"

"ஒவ்வொரு சுவிட்சர்லந்து வாசியும் வணங்கித்தான் ஆகவேண்டும்."

"தூணின் தலையில் வைத்திருக்கும் தொப்பியையா?"

"ஆம்; அது யாருடைய தொப்பி என்று எண்ணினுய்?"

"யாருடையது?"

"மேன்மை தங்கிய கவர்னர் கெஸ்லருடையது."

"இப்போது தூணுடையதாகவல்லவா இருக்கிறது!"

"ஆம்; அந்தத் தூணையும் தொப்பியையும் தான் நீ வணங்கவேண்டும். இந்த வழியிலே செல்பவர் எவருமே அதனை வணங்காமல் போகக் கூடாது."

"போனுல்?"

"மரண தண்டனை."

"இது உன் கட்டளையா?"

"இல்லை; கவர்னரின் கட்டளை."

காட்டுவாசி படைவீரனைப் பொருட்படுத்தாமல் அலட்சிமாகப் பார்த்துவிட்டு மேலே நடந்து செல்லலானுன். ஆஸ்திரியப் படைவீரன் அவனைப் பற்றி இழுத்து நிறுத்தினுன். இதற்குள் தற்செயலாக அந்த இடத்துக்குக் கவர்னர் கெஸ்லரும் வந்து சேர்ந்தான்.

வந்தவன், படைவீரன் வாயிலாக நடந்த செய்திகளை அறிந்தான். சினத்தால் அவனது

விழிகள் தீப்பொறிகளைக் கக்குவனபோல் காட்சியளித்தன. "துரோகீ!" என்று அவன் வாய் முணுமுணுத்தது. அவன் கால்கள் மெதுவாகக் காட்டுவாசியின் அருகே நடந்து சென்றன. இதற்குள் பெருங்கூட்டம் திரண்டு அவர்களைச் சுற்றிக்கொண்டது. எங்கோ சென்றிருந்த காட்டுவாசியின் மகனும் அதே சமயத்தில் அங்கு வந்து சேர்ந்து 'அப்பா' என்று விளித்து அவனை அணைத்து நின்ருன்.

கெஸ்லர் சிறுவன் கையைப் பற்றி இழுத்து "இந்தத் துரோகியின் மகனு நீ ?" என்று கேட்டான்.

"ஆம்; வில்லியம் டெல்லின் மகன் தான் அவன்" என்ருன் சுற்றி நின்ற கூட்டத்தினருள் ஒருவன்.

'வில்லியம் டெல்' என்பதுதான் அந்தக் காட்டுவாசியின் பெயர். இணையற்ற வில்லாளன் அவன். ஒவ்வொரு சுவிட்சர்லந்து வாசியும் அவனை நன்கு அறிவர். அஞ்சா நெஞ்சமும், அநியாயத்துக்குத் தலைவணங்கா மானமும் அவனெடு பிறந்த பண்புகளாம். இத்தகையவனுக்கும், தீயவனுன கெஸ்லருக்கும் ஏதோ சச்சரவு விளைந்திருப்பதைக் கண்டு

'என்ன நேரப்போகிறதோ' என்று திகைத்து நின்றனர் பொது மக்கள்.

"உன் மகனு இவன் ?" என்ருன் கெஸ்லர் ஆணவத்தோடு.

'ஆம்' என்ற கருத்தில் தலையை அசைத்தான் வில்லியம் டெல்; "அந்தச் சிறுவனுக்கு எந்தத் தீங்கும் செய்துவிடாதீர்கள் !" என்ருன் அமைதியாக.

"நீ தான் செய்யாமலிருக்கவேண்டும்" என்று கூறினுன் குறும்புத்தனமாகக் கெஸ்லர். "என் புதல்வனுக்கு நான் தீங்கு விளைவிப்பதா ?" என்ருன் வில்லியம் டெல் எதுவும் விளங்காமல்.

"ஆம், சிறந்த வில்லாளியாமே நீ! அவன் தலையில் ஆப்பிள் பழத்தை வைத்துக் குறி தவருமல் அடிப்பது என்ருல் உனக்குச் சிரமமாயிருக்குமோ ! குறி தவறினுல் பாவம் ! அவன் உயிரல்லவா பறிபோய்விடும் ! அது மாத்திரமா ? அப்படி உயிரைப் பறித்த உனக்கும் கொலைத் தண்டனை தப்பாது" என்ருன் ஏளன நகைப்பொடு கொடியவனுன கெஸ்லர்,

'கல்லைக் கிள்ளினால் கைக்குத்தானே கேடுண்டாகும்; இந்தக் கொடியவனோடு நீதி பேசினால் வாய்க்குக் கேடே தவிர பயன் எதுவும் விளையாது' என்று மனத்தில் எண்ணி யவனாய் வில்லியம் டெல் கெஸ்லரைக் கண் இமையாமல் உற்றுநோக்கினான்.

"என்ன பார்க்கிறாய்?" என்றான் கெஸ் லர்.

"உங்கள் சொற்படி செய்து நான் வெற்றி பெற்றால் என்ன கொடுப்பீர்கள்?" என்றான் நிதானமாக டெல்.

" உன் உயிரைக் கொடுத்து விடுகிறேன். ஆனால் குறிதவறினாலும், அல்லது உன் மகன் மீது கணை பாய்ந்தாலும் உனக்கு மரண தண்டனை தப்பாது" என்றான் உறுதி யாகக் கெஸ்லர்.

"ஒரே ஒரு வேண்டுகோள்" என்றான் டெல்.

'என்ன' வென்று கேட்டான் கெஸ்லர். "என் மகன் முகம் என்னை நோக்காமலிருக்க அவனைத் திருப்பி நிறுத்தவேண்டும். அதுவே என் வேண்டுகோள்" என மொழிந்தான் வில்லியம் டெல்.

அந்தக் கல்நெஞ்சன் அதற்கு மட்டும் இசைந்தான். 'டெல்லுக்கு அவன் மகனது முதுகுப்புறம் தெரியும்படி எதிரேயிருந்த ஒரு மரத்தொடு சேர்த்துக்கட்டி, அவன் தலையில் ஒரு ஆப்பிள் பழத்தை வைக்க உத்திரவிட்டான். பின்னர், தூரத்தில் வில்லியத்தை நிறுத்தச் செய்து அம்பினைச் செலுத்தும்படி கெஸ்லர் கட்டளையிட்டான்.

வில்லியம், கெஸ்லரை ஏற இறங்க ஒரு முறை பார்த்தான்; மெதுவாக முகத்தைத் திருப்பித் தன் மகனையும் அவன் தலைமீது வைத்திருக்கும் ஆப்பிளையும் நோக்கினான். மீண்டும் திரும்பி அவன் கண்கள் கெஸ்லரைப் பார்த்தன; கைகள் அம்பறுத்தூணியிலிருந்த கணைகளை ஆய்ந்து முடிவில் இரண்டு அம்புகளைப் பொறுக்கி எடுத்தன. ஒரு சரத்தை இடுப்பில் செருகிக்கொண்டான். பின்பு வில்லை வளைத்து நாணைக் கட்டி அதில் மற்றொரு கணையைப் பொருத்திக் காதுவரை இழுத்துவிட்டான். அம்பு 'விர்'ரென விரைந்து சென்று மரத்தில் பதிந்தது. அது மரத்தில் பதிந்ததும், ஆப்பிள் இரண்டு துண்டாகி மண்ணில் விழுந்ததும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன. மக்கள் மகிழ்ச்சியினால் ஆரவாரம் செய்தனர்.

எதையும் அறியாதவன்போல் வில்லியம் டெல் மீண்டும் மெதுவாக முகத்தைத் திருப்பி கெஸ்லரைக் கூர்ந்து நோக்கினுன். இப்போது அவன் பார்வை அவன் செலுத்திய அம்பினும் கூர்மையாகத் தோன்றியது கெஸ்லருக்கு.

"காட்டுவாசியே! மெச்சினேன் உனது வில் திறனை!" என்று வஞ்சகமாகப் பாராட்டினுன் கெஸ்லர். "ஒரு சந்தேகம்; சொல்லலாமா? நீ இரண்டு அம்புகளை எதற்காகத் தேர்ந்தெடுத்தாய்?" என்று தொடர்ந்து வினவினுன் அந்தத் தீயவன்.

"இந்தக் கணையைப்பற்றித் தானே கேட்டாய்?" என்று கூறிக்கொண்டே அதனை இடுப்பிலிருந்து எடுத்தான் வில்லியம் டெல். "இது பற்றி நீ தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம்தான். கேள்; சொல்கிறேன்; ஒருகால் என் முதற் கணை குறி பிழைத்துப் போனுல், இதனைக் குறி பிழையாமல் உன் நெஞ்சிலே பாய்ச்சுவதற்காக எடுத்து வைத்தேன். அவ்வளவுதான்."

இந்த விடையைக் கேட்ட மாத்திரத்தில் சுற்றி நின்ற மக்கள் 'கொல்'லென்று நகைத்

தனர். ஆனுல் கெஸ்லர் அதட்டிய கொடுங் குரலில் உடனேயே பேரமைதி தோன்றி விட்டது.

"காட்டுமிராண்டியே! கொடிய புலியடா நீ! நீ அளித்த விடை உன் உயிரை வாங்கு வதற்குப் போதியதாகும். ஆனுல் நான் சொன்ன சொல் தவற விரும்பவில்லை. இப் போது உன் உயிரை உனக்குத் தந்துவிடு கிறேன். ஆனுல் உன்னுல் எனக்கு எப் போது வேண்டுமானுலும் ஆபத்து நேரலாம் என்பது உறுதி. ஆகவே, என்னைக் காத்துக் கொள்ள உன்னை என் அரண்மனையிலுள்ள ஓர் இருட்டறையில் நெடுங்காலம் அடைத்து வைக்க விரும்புகிறேன்" என்று சொல்லிப் பயங்கரமாகச் சிரித்தான் கெஸ்லர்.

உடனே பல வீரர்கள் பாய்ந்து வில்லியம் டெல்லைப் பிடித்துக் கட்டினர்.

கெஸ்லர் வாழ்ந்திருந்த அரண்மனை 'யுரி' என்ற பெரிய ஏரியின் கரையில் இருந்தது. அதற்குக் குறுக்கு வழியாகக் கப்பலில் செல்லவேண்டும். ஆதலின் கெஸ்லரொடு டெல்லையும் அந்தக் கப்பலில் ஏற்றினர். கப்பல் மெல்ல நகர்ந்து அன்னம்போல் அசைந் தாடிச் சென்றது.

"அகதிக்கு ஆண்டவனே துணை" என்பது முதுமொழியன்றோ? கொடியவனான கெஸ்லரிடம் அகப்பட்டுக்கொண்ட நல்லோனாகிய டெல்லைக் காப்பாற்ற வல்ல மனிதர் எவருமே இல்லையாதலின் தெய்வமே துணைக்கு வந்தது. திடீரென்று பெரும் புயல் வீசிக் கப்பலை ஆட்டிக் குலைத்தது. கப்பல் கவிழாமல் கரையை அடைய இயலுமோ என்ற ஐயம் அனைவருக்கும் எழுந்துவிட்டது. ஆகவே டெல்லின் கட்டையும் அவிழ்த்துவிட்டுக் கப்பலைச் செலுத்துவதில் துணைபுரியப் பணித்தனர். டெல்லும் அவர்களுக்கு உதவுவது போல் பாசாங்கு செய்துகொண்டு தப்பிச் செல்வதற்கேற்ற இடத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

எதிர்க் கரையருகே உயர்ந்த இரண்டு பாறைகளினூடே கப்பல் புயற்காற்றால் தள்ளாடிச் சென்றுகொண்டிருந்தது. குபீரென்று டெல் பக்கத்திலிருந்த ஒரு பாறையின் மீது பாய்ந்தேறி எவரும் காணவகையில் விரைந்து மறைந்தான். இதைக் கண்டு கெஸ்லர் கொக்கரித்தான். "எங்கள் தாய்நாட்டைப் பாழ்படுத்த வந்த கொடும்பேயே! செத்து ஒழிவாயாக!" என்ற ஒலியினூடே ஓரம்பு விரைந்து

வந்து கெஸ்லரின் நெஞ்சில் பாய்ந்தது. 'ஹஹ்ஹஹ்ஹா' என்று வெடிபடச் சிரித்துக் கொண்டு டெல் ஒரு பாறையின் சிகரத்தில் நின்றுன். கெஸ்லர் துடித்து மடிந்தான்.

வில்லியம் டெல்லின் அம்புக்குக் கெஸ்லர் இரையான செய்தி காட்டுத் தீப்போல் பரவவே சுவிஸ் மக்கள் வீறுகொண்டு ஆஸ்திரியரொடு போருக்கு எழுந்தனர்; முடிவில் ஆஸ்திரியப் படைவீரர்களை முறியடித்துச் சாடி வீழ்த்தினர். கொடுங்கோன்மை அழிந்தது; அடிமைத்தளை நீங்கியது. சுவிட்சர்லந்து மீண்டும் சுதந்திர நாடாகத் தலை தூக்கியது.

எல்லோரும் வில்லியம் டெல்லை மன்னனுக இருக்கும்படி வேண்டினர். "மலைச் சாரலில் சுற்றித் திரிவதும், அங்கே குடிசையில் வாழ்வதுமே எனக்கு இன்பம் தருவனவாம். தக்க தலைவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லித் தன் குடிசையை நோக்கிப் போய்விட்டான் வீரனுன வில்லியம் டெல்.

வில்லியம் டெல்லின் அஞ்சாமையும், அவன் காட்டிய தீரமும் சாகஸமும், அவன்

கொடுத்த ஊக்கமும் உற்சாகமும் சுவிட்சர் லந்தின் மானத்தைக் காத்தன; மீண்டும் சுதந்திர நாடாக அது திகழ வழி செய்தன.

என்னே டெல்லின் தாய்நாட்டுப் பற்று! டெல்லைப் போன்ற வீரர்கள் தோன்றும் நாடு எந்நாளும் தாழ்வுறாது. நம் பாரதத்திலும் வில்லியம் டெல் போன்ற வீரர்கள் தோன்றித் திகழ்வார்களாக! தாய்நாட்டின் பெருமையை ஓங்கச் செய்வார்களாக!

## வினாக்கள்

1. ஆஸ்திரிய வீரனுக்கும் வில்லியம் டெல்லுக்கும் நடந்த உரையாடலை எழுதுக.
2. வில்லியம் டெல்லுக்குக் கெஸ்லர் வைத்த சோதனை யாது? அதன் முடிவு யாதாயிற்று?
3. டெல்லைக் கெஸ்லர் மீண்டும் கைதியாக்கக் காரணம் என்ன?
4. கெஸ்லரை டெல் எவ்வாறு வஞ்சம் தீர்த்துக் கொன்றான்?
5. வில்லியம் டெல்லின் குணச்சிறப்புக்களை எழுதுக.

## 4. வீர நங்கை

நானூறு ஆண்டுகளுக்கு முன்பு மேலை ஐரோப்பாவில் இங்கிலாந்து, பிரான்சு ஆகிய இரண்டு நாடுகளுக்கிடையே பெரும்போர் நிகழ்ந்துகொண்டிருந்தது. அதற்கு நூற்றாண்டுப்போர் என்று பெயர். ஏனெனில் அப்போர் ஏறத்தாழ நூறாண்டுகள் நடந்துவந்தது. அப்போது ஆங்கிலேயப் படைகள் பிரான்சில் தங்கள் தாக்குதலை நடத்திவந்தன. அப்போரின் இடையிடையே சில இடங்களில் பிரெஞ்சுக்காரர்களும் பல இடங்களில் ஆங்கிலேயர்களும் வென்றுகொண்டே வந்தனர். ஆங்கிலேயர்கள் அடைந்த வெற்றிகளே மிகப் பலவாக இருந்தமையால் நாளடைவில் பிரான்சு நாட்டின் மேலைப்பகுதி முழுவதும் ஆங்கிலேயர்கள் வசமாயிற்று; அன்றியும் அந் நாட்டின் தலைநகரான பாரிஸ் நகரமும் பகைவரிடம் அகப்பட்டது.

பிரெஞ்சு மன்னன் பகைவரை எதிர்த்துப் போரிடாமல் ஓடி ஒளிந்துகொண்டான். இளவரசனான சார்லஸ், 'ஷீனான்' என்னுமிடத்தில் அரசனுக்குப் பிரதிநிதியாக அரசு செலுத்தி

வந்தான். அவன் பல போர்களில் தோற்றுக் கொண்டே வந்ததாலும், ஆங்கிலேயர்களாகிய பகைவர்களை வெல்லுவதற்குப் போதிய திறமை அவனிடம் காணப்படாமையாலும் பிரெஞ்சு மக்களுக்கே அவனிடம் நம்பிக்கையும் மதிப்பும் குறைந்து வந்தன.

ஆங்கிலேயப் படையின் முக்கியமான தலைவனுயிருந்த பர்கண்டிக்கோமகன் தலை நகரமான பாரிஸில் தனது தலைமைக் காரியாலயத்தை அமைத்துக் கொண்டு மேலும் முன்னேறி லுவார் ஆற்றின் கரையில் அமைந்துள்ள ஆர்லியன்ஸ் நகரத்தை முற்றுகையிட ஏற்பாடு செய்தான்.

ஆர்லியன்ஸ் நகரம் பாரிஸிற்கு ஏறத்தாழ நூறு மைல் தென்பால் அமைந்துள்ளதாம். ஆர்லியன்ஸ் நகரமும் பகைவர் கையில் சிக்கிவிட்டால் பிரான்சு நாடு முழுவதுமே பகைவன் வசப்படுவது மிக எளிதாக முடியும். இத்தகைய நிலைமை ஏற்பட்டு விடாமல் இருப்பதற்காகப் பிரெஞ்சுப் படை தன்னுலான முயற்சி செய்தது; பிரெஞ்சு மக்கள் தங்கள் நாட்டின் சுதந்திரம் பறிபோகாமல் இருக்கவேண்டும் என்றும் கடவுளை வேண்டிக்கொண்டனர்.

இது இவ்வாருக, பிரான்சு நாட்டின் வடகிழக்குப் பகுதியிலே, ஷாம்பேன் மாவட்டத்திற்கும் லோரேன் மாவட்டத்திற்கும் இடையே உள்ள நாட்டுப் புறத்தில் ஒரு சிற்றூரில் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த ஒரு குடும்பம் வசித்து வந்தது. அக்குடும்பத்தவர்கள் மனவுரமும் கடவுள் வழிபாட்டுப் பண்பாடும் மிகுந்தவர்கள். அக்குடும்பத்தில் ஒரு பெண் இருந்தாள். அவள் பெயர் ஜோன் என்பது. அவள் இருபது வயதினையும் எய்தாத நிலையிலும் வீட்டு வேலைகளை ஒழுங்காகச் செய்வதிலும், ஆடுகளை மேய்த்துக்கொண்டு வந்து பட்டியில் அடைப்பதிலும், மற்றும் தனக்கென ஏற்பட்ட அலுவல்களைச் சலிப்பின்றிச் செய்வதிலும் ஆர்வமும் பெருமையும் கொண்டவள்; தனது கடமையைத் தவருமற் செய்வதில் அவள் இன்பம் கண்டவள்; அன்றியும் அதற்குத் தேவையான வன்மை வாய்ந்த உடலுரமும் படைத்தவள். அவள் பார்ப்பதற்கு மிகவும் அழகாயிருந்தாள் என்று கூற முடியாது. ஆனல் அகத்தினழகு முகத்தில் தெரியும் என்பது உண்மை மொழியன்ருே! அதற்கேற்ப, தூய்மை நிறைந்த உள்ளத்தவளான ஜோனின் முகத்தில் ஒரு ஒளி நிறைந்திருந்தது.

ஜோன் ஆடுகளை மேய்க்கக் கிராமத்துப் புல்வெளிகளுக்குப் போவது வழக்கம். ஆடுகள் ஒருபுறம் வயிறுர மேய்ந்து கொண் டிருக்க, ஜோன் மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு ஆழ்ந்து ஏதேனும் எண்ணமிட்டுக் கொண்டிருப்பாள். அவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டு, தன்னைச் சூழ்ந்துள்ள இவ் வுலகத்தை மறந்து அவள் இருக்கும் நிலையில் ஒரு ஞானியைப் போல் தோன்றுவாள். அவ் வமயங்களில் அவளுக்கு ஏதோ அசரீரி மொழிகள் கேட்பது போலத் தோன்றும். அவை தேவதைகள் குரல்போல் இனிமையாக இருக்கும். தான் என்ன செய்யவேண்டும் என்று தேவதைகள் தனக்கு ஆணையிடுவ தாக அவள் நினைப்பாள். ஆதலால் குரல் எப் பொழுது கேட்குமென்று பொறுமையோடு காத்துக்கொண்டும் இருப்பாள். கோயில் மணி அடிக்கும்போது அம்மணியோசையோடு கலந்து தேவதைகளின் குரல் வரும். அக் குரல் அவள் காதில் மட்டும் விழும்; மற்ற வர்களுக்குக் கேட்காது. ஆகையால், தான் தேவதைகளின் குரலைக் கேட்பதாகவும் அக் குரலின்படி தான் நடந்துகொள்வதாகவும் அவள் கூறினுல் அதை ஒருவரும் நம்புவ தில்லை. அவளுக்கு இருந்த அளவு கடவு

ளிடம் நம்பிக்கையும் அன்பும் கொண்டவர் களுக்கு மட்டும்தான் அக்குரல் கேட்கும். இதை அவளும் அறிந்திருந்தாள்.

ஒருநாள் அவள் ஆடுகளை மேய்த்து விட்டு, மரத்தடியில் உட்கார்ந்திருந்தாள். மாலைவேளை ஐந்து மணி இருக்கும். கோயில் மணி ஒலிக்க ஆரம்பித்தது. வழக்கம்போல ஜோன் அம்மணி ஓசையின் இன்பத்தில் கலந்து நின்ருள்; தன்னை மறந்தாள்; தன்னைச் சூழ்ந்திருந்த உலகையும் மறந்தாள். அம் மணியோசையில் கலந்து ஒரு குரல் வந்தது. அக்குரல் ஜோன் பலமுறை கேட்டுள்ள தேவதைகளின் குரல்தான். "உனது தாய்நாடு பகைவன் வயப்பட்டுத் தவிக்கின்றது. நாட் டின் தலைநகரம் அவன் கையகப்பட்டு விட்டது. உனது நாட்டு அரசன் எதிர்த்துப் போரிடத் துணிவின்றிப் பின்வாங்குகின்ருன். ஆர்லியன்ஸ் நகரமும் பகைவனுல் முற்றுகை யிடப்பட்டுள்ளது. அந்நகரம் மட்டும் பகை வனுக்குப் பணிந்துவிடுமாயின், இனி பிரான்சு நாட்டின் சுதந்திரம் முடிவடைந்துவிடும். இத்தகைய நிலையில் நாட்டைக் காக்க வேண் டிய கடமையும் திறமையும் உனக்கே உண்டு. நீ இங்கிருந்து ஆடு மேய்த்துக்கொண்டிருப்

பதில் ஒரு பயனுமில்லை. உடனே புறப்பட்டு ஆர்லியன்ஸ் நகருக்குப் போய் அங்கு நகரத்தை முற்றுகையிட்டு நிற்கும் ஆங்கிலேயப் படைகளை முறியடித்துத் துரத்தவேண்டும். அப்பொழுதுதான் பிரான்சு நாடு காப்பாற்றப்படும். ஆகையால், நீ உடனே புறப்பட்டு ஆர்லியன்ஸ் நகரத்திற்குச்செல்" என்று அக்குரல் கருணையோடும், கண்டிப்போடும் கூறிற்று.

இதைக் கேட்ட ஜோன், தான் மனக் குழப்பமடைந்திருப்பதால் இவ்வாறு யாரோ பேசுவது போலவும் தான் கேட்பது போலவும் தோன்றுகிறதோ என்று எண்ணினுள்; ஆயினும் மீண்டுமொருமுறை மணியோசை கேட்டபோது முன்பு கேட்ட குரல் முன்னினும் தெளிவாகக் கேட்டது.

உடனே ஜோன் தான் செய்யவேண்டியது யாது என்று உறுதியாக உணர்ந்தாள்; உணர்ந்ததும் தன் பெற்ருேரிடம் சென்று தான் கேட்டதையும் தன் மனநிலையையும் அறிவித்தாள். ஜோன் இவ்வாறு கூறுவதைப் பன்முறை கேட்டுள்ள அவள் பெற்ருேர்கள் முதலில் அவளை வெளியே செல்லவிட அஞ்சினர். ஆயினும் ஜோன் உறுதியாக இருந்

ததைக்கண்ட பெற்ருேர்கள் அவளேப் போக விடுத்தனர். அவளும் போர் புரிதற்கேற்ற ஆண் உடை உடுத்திக்கொண்டு மனேயை விட்டுப் புறப்பட்டாள்.

அருகிலிருந்த வாக்காலர் என்னும் கோட்டையில் ஒரு பிரெஞ்சுப் படைத்தலேவனுடைய காரியாலயம் இருந்தது. அங்கு ஒரு சிறு படையொடு ஒரு தலேவன் இருந்தான். அவன் ஒருவருக்கும் எளிதில் இசைந்து கொடுக்காத முரடன். அந்தச் சுற்றுப்புறங்களிருந்து யாரேனும் பிரெஞ்சுப் படையிற் சேர விரும்பிஞல் அந்தப் படைத் தலேவனுடைய உத்தரவு பெற்றே செல்லவேண்டும். அவன் பெயர் ராபர்ட் என்பது. அவனே அக்கோட்டைக்கும் அங்குள்ள படைக்கும் தலேவன். அவ்விடத்திற்கு ஜோன் வந்து சேர்ந்தாள்.

யாரோ ஒரு பெண், ஆண் உடைதரித்து வந்துள்ளதாயும் அவள் படைத்தலேவனே முக்கிய அலுவலாக உடனேயே பார்க்க விரும்புவதாகவும் ராபர்ட்டிற்குச் செய்தி எட்டிற்று. முதலில் அவளேப் பார்க்க மறுத்த ராபர்ட் பிறகு அவளேக்காண ஒருப்பட்டான்; ஆயினும் ஆண் உடை தரித்த ஒரு பெண்ணேப் போர்க்

களத்திற்கு அனுப்ப அவன் விரும்பவில்லை. பிறகு அவளுடைய உறுதியான மன நிலையை உணர்ந்த ராபர்ட் அவளை அரசகுமாரனை சார்லஸிடம் அனுப்ப ஒப்புக்கொண்டான். ஜோனோடு வேறு இரண்டு வீரர்களும் செல்ல உடன்பட்டனர். எல்லோரும் குதிரை மீதிவர்ந்து இளவரசனை சார்லஸ் இருந்த ஷினன் நகரத்திற்கு வந்து அரசகுமாரனுக்குத் தாம் வந்திருக்கும் செய்தியை அறிவித்தனர்.

அங்கு சார்லஸைச் சூழ்ந்திருந்தவர்கள், அரசகுமாரன் அவ்வெளிய குடியானவச் சிறுமியைப் பார்க்கக்கூடாது என்று தடுத்தனர். அவள் ஆண் உடை தரித்தது தவறென்றும் அதனால் அவளை நம்பக்கூடாதென்றும் சிலர் கூறினர். "பல ஆண்டுகளாகத் தேர்ச்சிபெற்ற போர் வீரர்களாலும், படைத் தலைவர்களாலும் வெல்லமுடியாத ஆங்கிலேயப் படைகளை இச்சிறுமியோ வெல்லப் போகிருள் ?" என்று சிலர் ஏளனமாகப் பேசினர். ஆயினும் வேறு சிலர் அவள் இன்னும் உலகியல் அறியாத சிறுமியாயிருப்பினும் இத்துணைத் துணிவோடு வந்து நாட்டைக் காப்பதாகக் கூறுவதால் அவளிடம் கடவுள்

தன்மை சிறிதேனும் இருக்கவேண்டுமென்று அவள் சார்பாகப் பேசினர். அன்றியும் கொடியவர்களும் வீணர்களும்கூட ஜோனைக் கண்டால் நல்லவர்களாக நடந்துகொள்ளு கிறார்களென்றும், அவள் ஆணையை மீறியவர் களைக் கடவுள் கடுமையாக ஒறுக்கிறார் என் றும் வேறு பலர் கூறத் தொடங்கினர்.

இவற்றையெல்லாம் கேட்ட சார்லஸிற்கு யாது செய்வது என்று விளங்கவில்லை. எவ்வாறாயினும் ஆங்கிலேயர்கள் நாட்டை விட்டு விரட்டப்பட்டு ஆர்லியன்ஸ், பாரிஸ் முதலிய நகரங்கள் விடுதலையடைந்து, நற் காலம் பிறந்தாற்போதும் என்று எண்ணி யிருந்தான் அவ்விளவரசன். ஆகையால் தன்னம்பிக்கை மிகுந்த ஜோனும் ராணுவத் தில் சேர்ந்து தன்னாலியன்றதைச் செய்து பார்க்கட்டும் என்று அவன் நினைத்து 'அவள் விருப்பம்போல் செய்யட்டும்' என்றான். இள வரசன் உத்தரவுபெற்றுப் போர்க்கோலத் தோடு ஒரு வெள்ளைக் குதிரைமீதிவர்ந்து பல படைவீரர்கள் புடைசூழ ஆர்லியன்ஸ் நகரை நோக்கிப் புறப்பட்டாள் ஜோன்.

அவ்வமயம் ஆர்லியன்ஸ் நகரை ஆங்கி லேயர்கள் முற்றுகையிட்டிருந்தனர் என்பது

முன்பே கூறினேம். பிரெஞ்சுப்படை நகருக்குள் அகப்பட்டுக்கொண்டிருந்தது. முற்றியிருக்கும் படையை முறியடித்தாலன்றி அவர்களுக்குத் தப்ப வழியில்லை. லுவார் நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்ததால் ஆற்றைக் கடக்கவும் வழியில்லை. முற்றுகையிடப்பட்டிருந்த ஆர்லியன்ஸ் நகரப் படைக்கு உதவியாக அனுப்பப்பட்ட பிரெஞ்சுப்படைக்கும் ஆற்றைக்கடக்க இயலாமற் போய்விட்டமையால் முற்றுகை தொடர்ந்து நடந்தது. ஆங்கிலேயர்களுக்கு உதவி மேலும் மேலும் அவர்கள் நாட்டிலிருந்து வந்து கொண்டிருந்ததால் இன்னும் சில நாட்களில் ஆர்லியன்ஸ் நகரம் அவர்கள் கையகப்பட்டு விடும் என்னும் நிலைமை ஏற்பட்டிருந்தது.

அப்போது பிரெஞ்சுப் படைக்குத் தலைவனாயிருந்த துனேய் என்பவன் போர்த்திறமையில் குறைந்தவனல்லன்; கோழையுமல்லன். அவனது திறனுக்கும் அப்பாற்பட்ட நிலைமையில் அவன் படைத்தலைவனாயிருந்தானதலின் ஆர்லியன்ஸ் முற்றுகையை எதிர்த்துப் பகைப் படைகளை விரட்ட அவனால் முடிய வில்லை.

174706

இந்த நிலைமையில் ஜோனும் அவள் நண்பர்களும் ஆர்லியன்ஸிற்கு வந்து சேர்ந்தார்கள். இளவரசனால் அனுப்பப்பட்டு ஜோன் வந்திருந்ததால் துனுய் அவளுடைய உதவியை ஏற்றுக்கொண்டான். ஜோன் போர் முறைகளை முறைப்படி கற்றவளில்லை. ஆயினும் துனுய்க்கும் எட்டாத சில நுட்பமான போர் முறைகளை அவள் அறிந்து வைத்திருந்தாள். அவற்றை அவள் விளக்கிக் கூறிய போது அவளது அறிவுத்திறத்தில் அப்படைத் தலைவனுக்கு நம்பிக்கை உண்டாயிற்று. தவிரவும் ஜோன் வந்து சேர்ந்த பிறகு லுவார் ஆற்றின் வெள்ளமும் அடங்கிற்று; போர் வீரர்களை ஏற்றிச் செல்லும் படகுகள் ஆற்றைக் கடக்க முடிந்தது. கடவுளருளால்தான் இக்கருணை நிகழ்ந்தது என்று கருதிய படை வீரர்களும் படைத்தலைவனும் ஜோனின் கூற்றை முற்றிலும் நம்பியதோடு அவள் ஆர்லியன்ஸ் நகரத்தை உண்மையாகவே காப்பாற்றுவாள் என்றும் கருதத் தொடங்கினர்.

ஜோன் வெள்ளைக்குதிரை மீதேறிக் கொண்டு பிரெஞ்சு வீரர்கள் பின்பற்றி வர, தேவதைகளின் உருவம் அழகாக வரையப்

பட்ட ஒரு கொடியை ஏந்திக் கொண்டு லுவார் ஆற்றைக் கடந்து சென்ருள். இங் ஙனம் ஓர் இளம்பெண் படைத்தலைமை பூண்டு அஞ்சா நெஞ்சினளாய்ப் போர்க்களம் புகுவதைக் கண்ட் ஆங்கிலேயர் திகைப்புக் கொண்டனர் ; பிரெஞ்சுக்காரர்கள் துணிவும் நெஞ்சில் உரமும் பெற்றுப் போருக்கெழுந் தனர். அதனுல் விரைவிலேயே ஆர்லியன்ஸ் நகரை முற்றியிருந்த ஆங்கிலேயர்கள் தோற் கடிக்கப்பட்டனர். ஆர்லியன்ஸ் முற்றுகை யினின்றும் விடுவிக்கப்பட்டது. பிரெஞ்சுக் காரர்கள் புத்துயிர் பெற்றனர். இளவரசன் சார்லஸ் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் அள வில்லை. இன்னும் பல விடங்களில் ஆங்கி லேயர்களைப் புறங்கண்ட ஜோன் ரீம்ஸ் நகரத் தில் உள்ள பெரிய கோயிலில் சார்லஸுக்கு முடி சூட்டினுள். அவ்விளவரசன் ஏழாம் சார்லஸ் என்னும் பட்டத்தோடு பிரெஞ்சு மன்னனுனன்.

தான் செய்து முடிப்பதாகக் கூறிய வற்றை யெல்லாம் ஜோன் நிறைவேற்றிவிட் டாள். அவளுடைய கடவுள் தன்மையில் பிரெஞ்சுக்காரர்களுக்கு முழு நம்பிக்கை ஏற் பட்டது.

தோற்றேடிக் கொண்டிருந்த ஆங்கிலேயர்களுக்கு வெட்கமும் வருத்தமும் அளவு கடந்தனவாயின. தன்னம்பிக்கையும் புத்துணர்ச்சியும் பெற்றுவிட்ட பிரெஞ்சு மக்களை இனித் தோல்வியுறச் செய்ய முடியாது என்பதையும், பிரான்சை விட்டு எப்படியாவது தாங்கள் வெளியேற வேண்டித்தான் வரும் என்பதையும் அவர்கள் நன்கு உணர்ந்தனர். ஆதலால் எவ்வாருயினும் ஜோனை உயிரோடு பிடித்துக்கொண்டு வந்துவிட வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தனர். ஜோனைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஏராளமாகப் பணம் கொடுப்பதாக அவர்கள் அறிவித்திருந்தனர்.

அதற்கேற்ப, பிரெஞ்சுக்காரர்களிடையே சில துரோகிகள் அவளது வெற்றியையும் புகழையும் கண்டு பொருமையடைந்திருந்தனர். எனவே அவர்கள் ஜோனைத் திருட்டுத்தனமாகப் பிடித்து ஆங்கிலேயர்களிடம் கொடுத்துவிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். தன்னை ஏமாற்றிப் பகைவர்களிடம் ஒப்படைத்து விடுவதற்காகத் தன் நாட்டவர்களிலேயே சிலர் செய்துவந்த சூதினை அறியாத ஜோன் ஆங்கிலேயப் படைத்தலை

வர்களை ஒருமுறை நேரிற் கண்டு பேச ஒப்புக் கொண்டு அவர் பக்கல் சென்ருள்.

அப்பொழுது ஜோன் சிறைப்பட்டாள். அவள், தான் ஒரு குற்றமும் அறியாதவள் என்றும், தேவதைகளின் வாக்கை நிறைவேற்றுவதற்காகவே நாட்டின் விடுதலைக்குப் போராடினதாகவும் கூறிக் கொண்டாள். ஆனல் ஆங்கிலேயர்கள் அவளை எவ்வாறேனும் ஒழித்துவிடவேண்டும் என்று உறுதி செய்து விட்டனர். அவள் பிசாசுகளை ஏவல் கொள்பவள் என்றும், தீய சக்தி அவளுக்கு உண்டென்றும், இல்லாவிடில் ஆங்கிலேயப் படைகளை அவளால் தோற்கடித்திருக்க முடியாது என்றும் அவர்கள் கூறினர். அக்காலத்தில் கடவுளுக்கும் பகையாகச் சிலர் உண்டு என்றும், அவர்கள் பிசாசுகளை ஏவல்கொண்டு எல்லாக் காரியங்களையும் சாதிப்பர் என்றும் மக்கள் நம்பி அவர்களைக் கண்டால் அஞ்சி நடுங்குவர். அதனல் அவர்கள் பிறருக்குத் தீமைபுரிவதற்குத் திறமையை மிகுதியாகப் பெற்றிருப்பவர்கள் என்று குற்றஞ் சாட்டி அவர்களைப் பிடித்து எரித்துவிடுவதும் உண்டு. ஜோன் அந்தத் தீய இனத்தைச் சேர்ந்தவள் என்று பழி சுமத்தி விட்டால்

அவளையும் எரித்துவிடலாம் என்று ஆங்கி லேயர்கள் கருதினர்.

பாவம்! பத்தொன்பது வயதும் நிரம்பப் பெருத ஜோன் மீது மேலே சொன்னவாறு குற்றஞ்சாட்டி, அந்தப் பெருங் குற்றங் களுக்குத் தண்டனையளிக்கப் போவதாகக் கூறிக்கொண்டு எரித்து விடத் தீர்மானித் தனர். அவள் ஆண் உடை தரித்திருந்ததும், பிற பெண்களைப்போல வீட்டு வேலைகளை மட்டும் மேற்கொண்டிராமல் போர்க்களத்தில் புகுந்து பகைவர்களைச் சாடியதும் கூட அவள் மீது குற்றங்களாகச் சாட்டப்பட்டன. அவள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை ஆங்கிலேய ராணுவ நீதி மன்றம் ஒன்று விசாரிக்க வேண்டும் என்று நியாயம் தவருத வர்போல் நடித்து விசாரணை செய்வித்து முடி வில் தண்டனையும் அளித்தனர்.

ரூவன் நகரத்தில் ஊர் நடுவே ஒரு நெடுங்கம்பம் நடப்பெற்று அதில் ஜோனைக் கட்டி வைத்து அக் கம்பத்திற்கு நெருப்பு மூட்டி விட்டனர். கம்பமும் எரிந்தது. ஜோனும் எரிந்து சாம்பராயினள்.

அதுகேட்டு பிரெஞ்சு மக்கள் மேலும் கொதித்தெழுந்தவர்களாய் வீறு கொண்டு

போர் செய்து ஆங்கிலேயர்களைத் திணற அடித்தனர். ஜோனை ஒழித்து விட்டால் தங்கள் தோல்விக்கு முடிவு ஏற்பட்டுவிடும் என்று ஆங்கிலேயர்கள் நினைத்தது தவறா யிற்று. அதற்குப் பிறகு பிரான்சில் நிற் பதற்குக் கூட அவர்களுக்கு இடமில்லாமல் துரத்தப்பட்டனர்.

வீர மரணம் எய்திய ஜோனின் பெயர் பிரெஞ்சு வரலாற்றில் மறையாமல் நிற்பதா யிற்று. உலகத்தில் நாட்டுக்குப் பணிபுரிந்த வீரப் பெண்டிர் வரிசையில் முதன்மையாக இடம் பெற்றவளானாள் ஜோன்.

### வினாக்கள்

1. ஜோன் கேட்ட குரல்கள் யாது கூறின?
2. ஜோன் அவள் தாய்நாட்டை எவ்வாறு காப் பாற்றினாள்?
3. ஆங்கிலேயர்கள் அவளை எவ்வாறு கொன்றனர்?

## 5. கருணை வீரர்

நூற்றெழுபது ஆண்டுகளுக்கு முன்பு வட அமெரிக்காவில் பதின்மூன்று ஆங்கிலேயக் குடியேற்ற நாடுகள் இருந்தன. இவற்றை ஆங்கிலேயர்கள் ஆண்டு வந்தார்கள். சில ஆண்டுகளில் இக்குடியேற்ற நாடுகளுக்கும் இங்கிலாந்துக்கும் பலவகைகளிலும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. இவற்றால் அந் நாடுகளுக்கும் இங்கிலாந்துக்குமிடையே போரும் மூண்டது. சில ஆண்டுகளில் அந் நாடுகள் சுதந்திரமடைந்து விட்டன. அவையும், பிற்காலத்தில் அவற்றோடு சேர்ந்து கொண்ட முப்பது புது இராச்சியங்களுமே தற்காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்ற பெயரோடு விளங்குகின்றன.

இவ்வமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒரு ஜனாதிபதியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டன. குடியேற்ற நாடுகளுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே நடந்த போரில் குடியேற்ற நாட்டுப் படைகளுக்குத் தலைமை வகித்து

நடாத்திய வீரரான ஜார்ஜ் வாஷிங்டன் என்பவரையே அந்நாடுகள் தங்களுடைய முதல் ஜனதிபதியாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டன.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வளர்ச்சிக்கும், பெருமைக்கும், புகழுக்கும் அந்நாட்டு ஜனதிபதிகளில் பலர் முக்கியமான காரணமாவர். அவ்வாறு சிறப்புற்ற ஜனதிபதிகளில் ஆபிரகாம் லிங்கன் என்பவர் ஒருவர்.

ஆபிரகாம் லிங்கன் மிகவும் எளிய குடும்பத்தில் பிறந்தவர். சிறுவயதில் இவருக்குப் பள்ளிக்கூடம் போய்ப் படிப்பதற்குப் போதுமான வசதிகள் இல்லை. இவர் தகப்பனரும் அதிகமாகக் கல்லாத எளியவராதலால் ஆபிரகாமுக்குக் கல்வி கற்பிக்க அவர் விரும்பவுமில்லை; அவரால் இயலவுமில்லை. ஆனல் ஆபிரகாமிற்குக் கல்வி பயில வேண்டும் என்ற ஆர்வம் அளவு கடந்திருந்தது. தன் வீட்டிலிருந்து நான்கு மைல்களுக்கப்பாலிருந்த ஒரு சிறு ஆரம்பப் பள்ளியில் அவர் சேர்ந்து படித்துவந்தார். அவருக்குப் படிப்பதற்குப் புத்தகங்களும் இல்லை; கணக்குகள் போடுவதற்குப் பலகையும் இல்லை; எழுதுவதற்கு எழுதுகோலும் இல்லை. கல்வி கற்ப

தற்கு இவ்வளவு இடையூறுகள் இருந்தும் அவருக்குக் கல்வியில் இருந்த ஆர்வம் குறையவில்லை.

ஆபிரகாமின் தந்தை மரம் வெட்டி விறகு விற்றுப் பிழைக்கும் தொழிலாளியாயிருந்தார். ஆகையால் அவர் வீட்டில் எப்போதும் பெரிய மரத்துண்டுகள் கிடக்கும். ஆபிரகாம் சிறு கரித் துண்டுகளைக்கொண்டு அம்மரத் துண்டுகளில் பாடங்களை எழுதுவார்; கணக்குகள் போடுவார்; எழுதின பகுதிகளை ஒரு கத்தியால் சுரண்டிவிடுவார்; மறுபடியும் எழுதுவார்; மறுபடியும் சுரண்டிவிடுவார். இவ்வாறு அவர் படிப்பு நடந்து வந்தது. இத்துணை இன்னல்களுக்கிடையே அவர் கல்வி கற்றாராயினும் கற்பதிலிருந்த ஆர்வப் பெருக்கினால் பல நூல்களை எளிதில் கற்றுக்கொண்டுவிட்டார். அவர் படித்தவற்றை எல்லாம் தவறாமல் நினைவு வைத்திருந்தார். தான் படிக்காத புதுப் புத்தகம் ஒன்றைத் தனக்கு யாரேனும் தருவார்களாயின் அவர்களே தனது உண்மையான நண்பர்கள் என்று அவர் கூறி நன்றி பாராட்டுவது வழக்கம்.

துன்பப்படுகிறவர்களுக்கு உதவி புரியும் பண்பு ஆபிரகாமுக்குச் சிறு வயதிலிருந்தே

ஏற்பட்டிருந்தது. அவர் படித்துக்கொண்டிருந்த பள்ளிக்கூடத்தில் ஒருநாள் ஆசிரியர் வகுப்பில் ஒரு மாணவியை ஒரு சொல்லை எழுத்துக் கூட்டிச் சொல்லும்படிக் கேட்டார். அந்தப் பெண் அவ்வாறு சொல்ல முடியாமல் விழித்தாள்; அந்தச் சொல்லில் 'ஐ' (i) என்னும் எழுத்தை வைத்துச் சொல்லுவதா அன்றி 'ஒய்' (y) என்னும் எழுத்தை வைத்துச் சொல்லுவதா என்று அவளுக்கு விளங்கவில்லை. இதைக் கண்ட ஆபிரகாம் தனது ஆட்காட்டி விரலைத் தன் கண்மீது வைத்து அந்த எழுத்து ஐ (i) என்று சைகைகாட்டினார். ஆங்கிலத்தில் 'ஐ' (eye) என்னும் சொல்லுக்குக் 'கண்' என்பது பொருள். இதை அறிந்து கொண்ட அப்பெண், உடனே புரிந்து கொண்டு ஆசிரியருக்கு சரியான விடை அளித்தாள்.

ஆபிரகாம் வயது வந்து பொருள் தேடத் தொடங்கிய காலத்தில் அவருக்கு நிலையான அலுவல் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆற்றின் இக்கரையிலிருந்து அக்கரைக்கு மக்களைப் படகுகளில் கடத்திச் செல்லும் தொழிலை அவர் சில காலம் மேற்கொண்டிருந்தார். இவர் இவ்வாறு வாடகைப் படகுகளை ஓட்டி வந்தது

சட்டத்திற்கு விரோதமானது என்று அரசாங்கத்தார் ஒரு வழக்குக் கொண்டுவந்தனர். இவ்வழக்கில் ஆபிரகாம் ஒரு வழக்கறிஞரை வைத்து வாதாடாமல் தானே நேரில் வாதாடினர்; வெற்றியும் பெற்ருர்.

தாம் பெற்ற வெற்றியிலிருந்து நியாயம் எந்தப்பக்கத்தில் இருக்கிறதோ அந்தக் கட்சி எப்போதும் வென்றே தீரும் என்னும் உண்மை ஆபிரகாமிற்குத் தெளிவாயிற்று. 'சட்ட நுணுக்கங்களைக் கல்லாமலேயே வாதாடி வென்ருேமே; அவற்றையெல்லாம் கற்றுத் தேர்ந்தால் மேலும் சிறப்புப் பெறலாமே' என்ற எண்ணம் அவருக்கெழுந்தது. அதனுல் சட்ட நுணுக்கங்களை எல்லாம் நன்ருகக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பின்னர் ஒரு சிறந்த வழக்கறிஞராகத் தொழில் புரிந்து மற்ற மக்களுக்கும் பயன்படவேண்டும் என்றும் விரும்பினுர். சிறு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்க இயலாமலிருந்த ஆபிரகாமிற்குச் சட்டக் கல்லூரியில் சேர்ந்து படிக்க எவ்வாறு முடியும்? ஆனுல் அதுபற்றி அவர் கலங்கவில்லை. பிறர் உதவியின்றிக் கற்க இயலாத சட்டப் புத்தகங்களையெல்லாம் வைத்துக்கொண்டு தானே விடா முயற்சி

யொடு படித்துச் சட்டத்தேர்வில் வெற்றியும் பெற்ருர். பிற்காலத்தில் ஆபிரகாம் அமெரிக்க வழக்கறிஞர்களெல்லாரினும் சிறந்தவர் என்று பெரும் புகழ் பெற்ருர். முயற்சியாலும் முடியாத செயல் உண்டோ ?

லிங்கன் தமது இடைவிடாத் தொண்டிஞலும், பெருந் தன்மையிஞலும் அமெரிக்க ஜஞதிபதி பதவியையும் யடைந்தார். அவர் ஜஞதிபதியான சமயத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கிடையே பெருத்த கருத்து வேற்றுமை தோன்றியது. அடிமைகளை வைத்துக் கொண்டிருப்பது தகுமா, தகாதா என்னும் கேள்வி பிறந்தது. பல அடிமைகளை வைத்து வேலை வ்ாங்கிவந்த தென் பகுதி நாட்டவர்கள் அடிமைகளை வைத்துக்கொள்வது முறையானது என்றனர்; வடநாட்டவர்கள் அடிமைகள் வைத்து வேலை வாங்குவது பெருங் கொடுமையாகும் என்றனர். ஆபிரகாம் அடிமை நிலையை எதிர்த்தார்.

இந்த வேற்றுமை முற்றிப் போர் மூண்டது. அது ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் வரையில் தொடர்ந்து நடந்து வந்தது. ஆபிரகாம் லிங்கன் ஜஞதிபதி என்னும் நிலையில்

அமெரிக்கப்படைகளுக் கெல்லாம் தலைவரா யிருந்தார். ஆகையால் போர் வீரர்களுடைய நன்மையிலும் அவர் பெறும் வெற்றியிலும் நாட்டங்கொண்டவரா யிருந்தார்.

அமெரிக்க குடியேற்ற நாடுகளின் வட பகுதிப் போர்ப்படையில் ஸ்காட் என்னும் பெயருடைய வீரன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒருமுறை இராணுவ நிலையம் ஒன்றை இரவில் காவல் காக்க வேண்டிய முறை வந்தது. இராணுவ நிலையங்களில் காவல்காக்க வேண்டியவர்கள் கவனக் குறைவாக இருப்பார்களாயின் அது மிகப் பெரிய குற்றமாகக் கருதப்படும். ஸ்காட் காவல் காத்துக் கொண்டிருந்த அன்றிரவு களைப்பு மேலீட்டால் சிறிது நேரம் உறங்கி விட்டான். அக்குற்றத்திற்கு அவனை ஒறுத்தற் பொருட்டு இராணுவ மன்றம் ஒன்று நிறுவப்பட்டது. அம் மன்றத்தார் ஸ்காட் மன்னிக்க முடியாத குற்றம் செய்து விட்டதாகத் தீர்மானித்து அவனைச் சுட்டு விடும்படி உத்திரவிட்டனர். ஸ்காட்டினுடைய தாய் இத்தண்டனையைக் கேட்டதும் மனமுடைந்து பெரிதும் வருந்தினாள்; தன் மகனை எவ்வாறேனும் காப்பாற்ற முடியுமா என்று எண்ணிப் பார்த்தாள்.

அவள் ஜனுதிபதியான ஆபிரகாம் லிங்க னின் இரக்க சிந்தனையைப் பற்றிக் கேள்வி யுற்றிருந்தாள். துன்பத்திலிருப்பவர்களுக்கு அவர் எப்போதும் உறுதுணையாவர் என்பது அவளுக்குத் தெரியும். ஆதலால் அவள் நேரே ஆபிரகாம் லிங்கனிடமே சென்ருள். அரசி யல் நிருவாகத்தை யொட்டிப் பற்பல பெரிய அலுவல்களைக் கவனிக்க வேண்டிய ஜனுதி பதி ஒரு சாதாரண போர் வீரனுக்காக அக் கறை எடுத்துக்கொள்வது பற்றிச் சிலர் ஐயுற்றுப் பேசி ஸ்காட்டின் தாயாரை நம் பிக்கை யிழக்கச் செய்தனர். ஆனுல் தன் உறுதி தளராமல் ஸ்காட்டின் தாய் வாஷிங் டனுக்குச் சென்ருள். அங்கு, யாரோ ஒரு போர் வீரனின் சார்பாக அவன் தாய் தன்னைக் கண்டு பேச விரும்புகிருள் என்பதைக் கேள்வியுற்ற ஜனுதிபதி உடனே அவளை வரச்செய்து 'அவள் வேண்டுவது யாது' என்று வினவினுர். தன் மகனுக்கு நேர்ந்த இன்னலை அவள் எடுத்துக் கூறி வருந்தினுள்.

இதைக் கேட்ட ஆபிரகாம் லிங்கன் சிறிது நேரம் தனக்குள்ளே எண்ணிப் பார்த் தார். 'களைப்பு மேலீட்டால் அன்ருே அவ் விளம் போர் வீரன் தன்னையும் மறந்து துயில்

வாய்ப் பட்டிருக்க வேண்டும்? அக்குற்றத் திற்காக அவனைச் சுட்டுவிடும்படி உத்தர விடுவது மிகையான தண்டனையாம்' என்று அவர் நினைத்தார். உடனே அவர் ஸ்காட்டின் தாயாரை விளித்து "உன் மகன் ராணுவக் கட்டுப்பாடுகளுக்குக் கீழ்ப்படியாமல் இருந்து விட்டதால் அவன் தண்டனை அடைவது தவிர்க்க முடியாதது. ஆயினும் அவன் உன்னுடைய ஒரே மகன் என்றும் அவ னில்லையேல் உன்னைக் காப்பவர் எவரும் இல்லை என்றும் நீ கூறுவதால், உனக்கு உதவ வேண்டும் என்றே கருதுகிறேன். என்னால் இயன்றதைச் செய்கிறேன்; ஆயி னும் என்ன செய்ய விரும்புகிறேன் என்ப தைப்பற்றி இப்பொழுது நான் ஒன்றும் உறுதி யாகக் கூறுவதற்கில்லை. இப்பொழுது நீ உன் ஊருக்குச் செல்லலாம்" என்று அவளுக்கு ஏற்றவாறு ஆறுதல் மொழிகள் கூறி அனுப் பினார். ஜனாதிபதி சொன்ன சொல் தவற மாட்டாராதலால் தன் மகனை எங்ஙனமேனும் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையோடு அவள் திரும்பிச் சென்றாள்.

தாயை அனுப்பி வைத்த ஆபிரகாம் லிங் கன் சிறிதும் தாமதியாமல் இராணுவத்

தலைமைக் காரியாலயத்திற்குச் சென்றார். அங்குப் படைத் தலைவரை விளித்து, "சில நாட்களுக்கு முன்பு ஸ்காட் என்னும் போர் வீரனுக்கு நீங்கள் ஏதேனும் தண்டனைவிதித்த துண்டா?" என்று வினவினார். படைத் தலைவர் "ஆம்; அவன் படை நிலையத்தை ஒழுங் காகக் காவல் புரியாமல் கவனக் குறைவாக இருந்த குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டுள் ளான். அவனை நாளை சுட்டுக் கொன்று தண் டனையை நிறைவேற்றுவோம்" என்றார். இரா ணுவத்தில் கட்டுப்பாட்டை நிலைநிறுத்து வதில் தாம் முனைந்திருப்பதைக் கண்டு ஜனாதி பதி மகிழ்ச்சி கொள்வார் என்று அப்படைத் தலைவர் எதிர்பார்த்தனர். ஆனால் அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக ஜனாதிபதியின் முகத்தில் கவலைக் குறிகள் தோன்றின.

"அவன் செய்த குற்றம் அத்துணைக் கொடுந் தண்டனைக்கு ஏற்ற குற்றமாகத் தோன்றவில்லை. இவ்வொருமுறை அவனை மன்னித்து விட்டுவிடுங்கள்" என்றார் ஆபிர காம் லிங்கன்.

"ஐயா ! இராணுவத்தில் குற்றம் செய்த வர்களுக்குக் கருணை காட்டுகிற வழக்க மில்லையே" என்றார் படைத்தலைவர்.

"கடவுளால் படைக்கப்பட்டவர்கள் எல்லோருமே கருணைக்கு உரியவர்கள் என்பது என் கருத்து" என்ருர் ஜனுதிபதி.

இதற்கு விடை கூற இயலாத படைத் தலைவர் ஸ்காட்டை விடுதலை செய்ய அரை மனத்தோடு ஒப்புக்கொண்டார். ஸ்காட்டின் தாயார் ஆபிரகாமிடம் வந்து தனது நன்றியறிதலை ஆனந்தக் கண்ணீர் பெருக்கிப் பலவாருகத் தெரிவித்துக் கொண்டாள்.

சின்ஞட் கழித்து நடந்த ஒரு போரில் ஸ்காட் முன்னணியில் நின்று பெரும் போர் புரிந்துகொண்டிருந்தான். அப்போது பகைவனுல் எறியப்பட்ட குண்டு ஒன்று அவனைப் படுகாயப்படுத்தி மரணத்தின் வாயிலில் நிறுத்தியது. அப்போது ஸ்காட் "என் உயிரைக் காப்பாற்றிய ஜனுதிபதிக்காக என் உயிரை இப்போர்க்களத்தே விட்டு என் நன்றிக் கடனை ஓரளவு தீர்க்கின்றேன் என்று அவரிடம் சொல்லுங்கள்" என்று கூறிக்கொண்டே தன் ஆவி துறந்தான்.

இவ்வாறு ஆபிரகாம் லிங்கன் பலருக்கும் புரிந்த பல நன்மைகளால் நாட்டு மக்களின் உள்ளத்தில் நீங்கா இடம் பெற்ருர். அமெரிக்க

உள்நாட்டுப் போரும், இறுதியில் வடக்கு நாடுகளுக்கு வெற்றிகரமாக முடிந்து ஆபிரகாம் லிங்கனுக்கு மேலும் பெருமையை அளித்தது. போர் முடிந்ததும் தெற்குநாடுகளில் இருந்த எண்ணிறந்த அடிமைகள் விடுதலை யடைந்து லிங்கனைத் தெய்வமெனப் போற்றினர். உலகமே அவரைப் புகழ்ந்தது.

போர் முடிந்து வெற்றி கண்டு ஐந்து நாட்கள் கூட ஆகவில்லை; ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் ஒரு நாடகக் கொட்டகையில் நாடகம் பார்க்கச் சென்றார். அவருடைய பகைவன் ஒருவன் திடீரென்று கொட்டகையிற் புகுந்து ஜனாதிபதியைக் குறிவைத்துச் சுட்டான். ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் சுருண்டு கீழே விழுந்தார். அவரைப் பலர் நாடகக் கொட்டகையிலிருந்து அருகிலிருந்த ஒரு மனைக்கு எடுத்துச் சென்றனர். அங்குப் போனபின் சில மணி நேரங்களுக்குப் பிறகு அவர் உயிர் துறந்தார்.

தனது நாட்டுக்குப் பேரும் புகழும் வாங்கித் தந்த தலைவரான லிங்கன் இன்றும் நன்றியறிதலோடு அமெரிக்க மக்களால் போற்றப் பட்டு வருகிறார்.

## வினாக்கள்

1. ஆபிரகாம் லிங்கன் இளவயதில் எவ்வாறு கல்வி கற்ருர் ?
2. அமெரிக்க உள்நாட்டுப் போரினையும் அதன் முடிவையும் விளக்குக.
3. ஸ்காட்டின் தாயும் ஜனுதிபதியும் எவ்வாறு உரையாடி யிருப்பரென்று கற்பனை செய்து எழுதுக.
4. ஸ்காட் என்னும் போர்வீரனுக்கு லிங்கன் செய்த உதவி யாது ?

## முடிவுரை

இதுவரை ஐந்து வீரர்களின் வரலாறு களில் ஒரு சில சுவையான நிகழ்ச்சிகளை நாம் படித்தோம். நாம் கண்ட வீரர்களெல்லோ ருமே மேனுட்டில் தோன்றிப் புகழ் பெற்றவர் களாவர். எந்த நாட்டவராயிருந்தாலும் அவர் களிடத்திலிருந்து நாம் அறியவேண்டிய நல் லனவற்றை ஆராய்ந்து எடுத்துக்கொள்வதே அறிவுடைமையாகும்.

நாம் எடுத்துக்கொண்ட வரலாற்று வீரர் களுள் நால்வர் ஆண்பாலராவர்; ஒருவர் பெண்பாலராவர். இனி அவர்களைப் பற்றித் தனித்தனியே சிறிதளவு பார்ப்போம்.

தியாக வீரராம் சாக்ரடீஸ் உலகப்புகழ் பெற்ற மேதையாவர். தமது கொள்கைக்காக உயிரை நீப்பதா, அல்லது உயிருக்காகக் கொள்கையை விடுவதா என்ற சிக்கல் நேர்ந் தது அவருக்கு. அந்நிலையில் அவர் சிறிதும் உள்ளம் கலங்கவில்லை. 'உயிர் என்றேனும்

அழிந்தே போவதாம்; ஆனால் தமது தலை சிறந்த கொள்கைகள் உலகமுள்ள வரை நிலைத்திருப்பனவாம்' என்று உண்மையை உணர்ந்தவராய், பகைவர் கொடுத்த நஞ்சினை அருந்தி ஆவியைத் தியாகம் செய்யத் துணிந்தார். என்னே அவரது தியாகத்தின் மாண்பு! எனவே தீயோருக்கு அஞ்சி நல்ல கடப்பாடுகளை நழுவவிடும் கோழையாகச் சமூகத்தில் வாழ்தல் மேன்மையை அளிக்காது என்ற உண்மையை சாக்ரடீஸின் வரலாற்றினால் தெரிந்து கொள்கிறோம்.

'துறவிக்கு வேந்தன் துரும்பு' என்பது நம் தமிழகத்து வழங்கப்படும் பழமொழியாம். இதனை உண்மையாக்குகிறது ஞானி தயசீனஸின் வரலாறு. உலகையெல்லாம் வென்று சக்கரவர்த்தியெனப் போற்றப்பட்ட அலெக்ஸாந்தர் தயசீனஸின் காலடியில் வந்து மண்டியிட்டு அவரது கட்டளைக்குக் காத்து நின்றான் என்றால் ஞானியரின் பெருமையை அளவிட்டுக் கூறவும் முடியுமோ? எனவே, நாடாளும் மன்னரையும் அடிபணிய வைக்கவல்லது உண்மையறிவு எனப்படும் மெய்ஞ்ஞானம். அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானம் பெற்றுத் திகழ்வதை ஒவ்வொரு

வரும் வாழ்க்கையில் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

வில்லியம் டெல்லின் வரலாறு ஒவ்வொரு வருக்கும் நாட்டுப்பற்றினையும், அநியாயத் துக்குத் தலைவணங்காத அஞ்சாமையையும் வற்புறுத்துவதாகும். அநீதியை அஞ்சாமல் எதிர்த்துப் போராடும் வீரர்களாலேயே ஒரு நாடு மேன்மை பெறும்; உரிமையை இழக்கா மல் தலைநிமிர்ந்து நிற்கும். அடிமையுற் றிருந்த சுவிட்சர்லந்து வில்லியம் டெல்லினால், மீண்டும் சுதந்திர நாடாகித் தலையெடுக்க முடிந்தது. நமது பாரத நாட்டிலுள்ள ஒவ் வொரு இளைஞரும் வில்லியம் டெல்லைப் போல் மானத்திற் சிறந்தவராய், வீறுபெற்ற உள்ளத்தினராய் இருத்தல் வேண்டும்.

பெண்ணும் ஆடவரைப்போல் போர்க் களத்தில் பகைவரோடு போராடி வாகைமாலை சூட முடியும் என்பதை ஜோன் என்னும் நங்கையின் வரலாறு எடுத்துக் காட்டுகிறது. மானத்தை இழந்து மாய்ந்து கொண்டிருந்த பிரான்சு நாட்டுக்கு வீரவுணர்ச்சியை யூட்டி எல்லோரையும் அஞ்சா வீரர்களாக்கி மீண் டும் பெருமை பெறச்செய்த உத்தமியாவர் ஜோன். நன்றியற்ற விலங்கு போன்ற மனி

தரும், புறத்தே உறவுகாட்டி அகத்தே பகை பாராட்டும் தீயவரும் ஒரு நாட்டினை எவ்வாறு சீர்குலைப்பர் என்பதையும் ஜோன் என்ற பெண்மணியின் முடிவு நமக்கு எடுத்துக் காட்டுகிறது. எனவே, சுயநலத்தால் தாய் நாட்டுக்குத் தீங்கிழைக்கும் புல்லியர் கூட்டம் ஒரு நாட்டில் தலையெடுக்கவொட்டாமல் காப்பதும், அப்படிப்பட்டவரைப் பூண்டொடு அழிப்பதும் தாய்நாட்டுப்பற்று மிக்க ஒவ்வொரு வீரனுக்கும் கடமையாகும்.

மனிதரெனப் பிறந்தவர் ஒவ்வொருவரும் கருணை நிரம்பிய உள்ளங்கொண்டவராயிருத்தல் வேண்டும் என்பதனை ஆபிரகாம் லிங்கனின் வரலாறு நமக்கு உணர்த்துகிறது. அமெரிக்கக் குடியரசின் ஜனாதிபதியாயிருந்த லிங்கன், ஒரு தாயின் கண்ணீரைத் துடைக்கச் சாதாரண சிப்பாய்க்கு உதவி செய்ய விரைந்தோடி வந்தார் என்றால் அவர் காட்டிய எளிய தன்மையை எங்ஙனம் புகழ்வது? பதவி உயர உயரப் பணிவும், அடக்கமும் மேலோங்கி நிற்க எங்ஙனம் வாழ்வது என்பதனை லிங்கன் உலகுக்கு எடுத்துக்காட்டினார்; அதனாலேயே அழியாப் புகழ் பெற்றார். எளியவரிடத்துக் கருணைகாட்டுவதும் ஒரு

வித வீரமேயாகும். அதனைக் கருணை மறம் என்பர் பழந்தமிழர்.

எல்லாவகைப்பட்ட வீரம் செறிந்தவரும் ஒரு நாட்டில் நிறைந்திருக்க வேண்டும். அதனாலேயே அந்த நாடு மேன்மையையும் புகழையும் எய்த முடியும். அத்தகைய பல திறப்பட்ட வீரர் நிறைந்த நாடாக நம் பாரத நாடு விளங்கி ஆசிய சோதியாய்த் திகழ்வ தாகுக!

ஆவணக்காப்பக
174706
சென்னை-600 008.
09.6.60

12512/887

MADRAS RECORD OFFICE
MADRAS

RAJA RAMCHANDER & CO
TRIPLICANE